# ஜெபத்தின் விதிகள்

## அஸ்திபார சத்தியம் தொகுப்பு 7

## பீட்டர் டான்

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10. விலை கொடுத்த இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள். வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

# முகவுரை

தேவனுடைய எல்லா அசைவாடுதல்களும், எப்பொழுதுமே ஜெபத்தின் பெரிய அசைவுக்குப்பின்புதான் வந்துள்ளன. இந்த மகத்தான கடைசி தேவ அசைவாடுதலில், தேவ ஜனங்களுக்குள் உபவாசித்து ஜெபிக்கும் எழுச்சியை, நாம் முதலாவதாக காணப் போகிறோம். இது ஒவ்வொரு சபையிலும், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு தேசத்திலும் நிறைந்திருக்கும்! தேவ ஜனங்களில் சிலர், நாட்கணக்கிலே ஜெப சிற்றறைகளில் பிரவேசிப்பார்கள். ஒரு சிலர் மாதக்கணக்கில் ஜெப சிற்றறைகளில் இருப்பார்கள். முன்பு காண்பிக்கப்பட்ட அடையாளங் களும் அற்புதங்களும் கடைசி நாட்களில் வெளிப்படுத்தப்படும்.

ஜெபத்தின் பல்வேறு வகை அமைப்பையும் வழிமுறைகளையும், வெளியில் கொண்டு வருவதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு வகை ஜெபமும் வித்தியாசமான சூழ்நிலைகளில் செயல்படுகிறது. பல்வேறு வகையான எல்லா ஜெபத்தையும் அப்பியாசிப்பது, கிறிஸ்தவர்கள் சந்திக்கும் ஒவ்வொரு எதிரிடையான சூழ்நிலைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்.

ஜெபம் என்பது போதிக்கப்பட்ட மற்றும் கற்றுக்கொள்ளப்பட்ட பழக்கமாகும். எவ்வாறு ஜெபிப்பது என்ற சரியான போதனையின்மை, திருச்சபையின் மிக முக்கியமான ஆயுதங்களில் ஒன்றை திருச்சபையில் திருடிவிட்டது.

இரண்டு மலைகளுக்கிடையே ஒரு பள்ளத்தாக்கை, ஒரு தரிசனத்திலே தேவன் எனக்கு காண்பித்தார். ஒரு மிகப்பெரிய பிரமாண்டமான கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

அந்தக் கட்டிடத்தின் ஆரம்ப அத்தியாவசிய தாங்கும் அமைப்பு ஒவ்வொன்றும், நீளத்திலும் அகலத்திலும் நூற்றுக்கணக்கான அடிகளாய் இருந்தன. இப்படிப்பட்ட பிரமாண்டமான கட்டிட அமைப்பை, இதுவரை நான் கண்டிராததால் பிரமித்துப்போனேன். எனக்கு அடையாளம் தெரிந்த தேவ மனிதர்களை அங்கு பார்த்தேன். அவர்களில் சிலர் முந்தின தலைமுறையைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். அந்த கட்டிடத்தின் வேலையில் நானும் சேர்ந்துகொள்ளும்படி, அவர்கள் என்னை சைகைகாட்டி அழைத்தார்கள்.

அந்த தரிசனத்திலிருந்து நான் வெளியே வந்தபோது, அந்த இரண்டு மலைகளும் அவருடைய முதலாம் இரண்டாம் வருகை என்று ஆண்டவர் என்னோடு சொன்னார். கட்டப்பட்டுக்கொண்டிருந்த கட்டிடம்தான் திருச்சபை ஆகும். மற்றும் அந்த கட்டிட ஆரம்ப அமைப்புகள்தான் **ஜெபத்தின் தூண்கள்** ஆகும்.

***ஜெபத்தின் தூண்களாகிய*** அஸ்திபாரத்தை நிலைநிறுத்த, தேவன்தாமே நமக்கு கிருபை அருளிச்செய்வாராக.

பாஸ்டர் ***பீட்டர் டான்***

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

*அத்தியாயம் 1*

# ஜெபிப்பதற்கு சரியான வழி

கிறிஸ்தவ வாழ்க்கையின் மிக முக்கியமான அஸ்திபாரங்களுள் ஒன்று, ஜெபக்கலையை கற்றுக்கொள்வதாகும். ஜெபத்தில் வெற்றி காணும் ஒருவனே, வெற்றியுள்ள கிறிஸ்தவன் ஆவான். நாம் ஐந்து வகை ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோமோ இல்லையோ, நம்முடைய ஊழியம் மற்றும் கிறிஸ்தவ வாழ்வின் வெற்றி, நம்முடைய அழைப்பை அல்ல, நம்முடைய ஜெப வாழ்வையே சார்ந்திருக்கிறது.

*இயேசுவின் வாழ்வில் ஜெபத்தின் முக்கியத்துவம்*

இந்த பூமிக்கு இயேசு வந்த அருட்பணியின் வெற்றி, தேவனிடம் ஜெபத்தை ஏறெடுத்த அவருடைய ஆற்றலை பொறுத்தே இருந்தது. அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார் (எபி. 5:7). இயேசு தம்முடைய ஜெப வாழ்வில் தோற்றுப்போயிருந்திருப்பாரானால், தேவனுடைய மீட்பின் திட்டத்திலும் தோற்றுப்போயிருந்திருப்பார். வெற்றியுள்ள ஜெபம் இயேசுவுக்கு பிரதான முக்கியத்துவமாயிருந்தது.

இயேசு தம்முடைய பன்னிரெண்டு சீஷர்களைத் தெரிந்துகொள்ளும் முன்பு, அந்த முழு இரவையும் ஜெபத்தில் கழித்தார் (லூக். 6:12). அவர் மலையிலிருந்து இறங்கின உடனே, பன்னிரெண்டு அப்போஸ்தலரை நியமித்தார் (லூக். 6:13). அவர் ஜெபத்திலிருந்தபோது, யாரை தெரிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அவர் தேவனுடைய குமாரனாயிருந்தும், நம்மைப்போலவே வழிகாட்டுதலைப் பெற்றுக்கொள்ள, இயேசுவும் அதே ஜெபத்தின் விதிகளுக்கு கீழ்ப்படிய வேண்டியதாயிருந்தது.

அவர் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்ற பிறகு, இன்னும் தண்ணீரில் இருக்கும் போதே, பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் இறங்கும் முன்பதாக அவர் ஜெபித்தார் (லூக். 3:21). அவருடைய சீஷர்கள் அவருடைய மகிமையில் அவரை காண்பார்கள் என்று அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார் (லூக். 9:27). பின்பு அவர் மலையில் இருக்கும்போது, அவர் ஜெபம்பண்ணினதினால் மாத்திரமே அவர் மறுரூபமானர் (லூக். 9:29).

தேவனோடு கண்விழிப்பு ஜெபங்களில். நீண்ட நேரம் செலவிடுவதை இயேசு வழக்கமாக்கி இருந்தார். சில நேரங்களில் அதிகாலையில் இருட்டோடே எழுந்து ஜெபிக்கும்படி தனிமையான இடங்களைத் தேடினார் (மாற். 1:35). சில நேரங்களில் நீண்டநாள் ஊழியத்திற்குப் பின்பும், கர்த்தராகிய இயேசு இன்னும் ஜெபத்தில் பிதாவின் முகத்தை தேடிக் கொண்டேயிருந்தார் (மத். 14:23).

*பிதாவிடம் ஜெபிப்பது*

ஜெபிக்கும்போது யாரிடம் ஜெபிப்பது என்று அநேக கிறிஸ்தவர்களுக்கு கற்றுக்கொடுக்கப் படவில்லை. தேவன் மூவராய் இணைந்து ஒற்றுமையாய் இருப்பதால் அவர்களுக்கு தடுமாற்றம் ஏற்படுகிறது. அநேகர் இயேசுவிடம் ஜெபித்து முடிக்கிறார்கள். மற்றவர்கள் திரியேக தேவனிடம் (மூவரிடம்) நேரத்தைப் பிரித்துக்கொள்கிறார்கள். திரியேக தேவனிடம் எந்த பிரச்சனையும் இல்லை. ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் இயேசுவை மகிமைப்படுத்த விரும்புகிறார் (யோவா. 16: 13, 14). கர்த்தராகிய இயேசு பிதாவை மகிமைப்படுத்த விரும்புகிறார் (யோவா. 17:1).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

ஒவ்வொரு முழங்காலும் முடங்கி, ஒவ்வொரு நாவும் இயேசுவே கர்த்தர் என்று அறிக்கையிடும்போதெல்லாம், அது பிதாவின் மகிமையாய் இருக்கிறது (பிலி. 2:9, 10).

தேவன் தம்முடைய பரலோக நிர்வாகத்தை அமைத்திருக்கும் விதத்தை புரிந்துகொள்ள முடியாத கிறிஸ்தவர்களிடத்தில்தான் பிரச்சனை இருக்கிறது. நாம் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதல், வழிகாட்டுதலின்படி, இயேசுவின் நாமத்தில் பிதாவிடம் ஜெபிக்க வேண்டும் என்பதே, தேவனுடைய திட்டமும் வடிவமைப்புமாய் இருக்கிறது. நாம் இயேசுவை ஆராதிக்கலாம், துதிக்கலாம் அல்லது அவரை நம்முடைய இருதயத்திற்குள் பெற்றுக்கொள்ளும் படி ஜெபிக்கலாம். இரண்டு காதலர்களுக்கிடையே உள்ள நெருக்கமான ஐக்கியத்தைப்போல நாம் இயேசுவிடம் பேசலாம். அதே உணர்வோடு நாம் பரிசுத்த ஆவியானவரிடமும் பேசலாம். எனினும் எல்லா அதிகாரப்பூர்வமான ஜெபங்களும் பிதாவிடம் செய்யப்படவேண்டும்.

சீஷர்கள் ஜெபத்தைக் குறித்து இயேசுவிடம் கேட்டபோது, பரலோகத்திலுள்ள பிதாவிடம் ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார் (மத். 6:9). இயேசு ஜெபித்தபோது, அவரே பிதாவிடம்தான் ஜெபித்தார் (யோவா. 17:2, 24, 25). ஆதித் திருச்சபை பிதாவிடம் உபத்திரவத்தைக் குறித்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபித்தது (அப். 4: 24, 27, 30).

பதிவு செய்யப்பட்ட பவுலின் எல்லா ஜெபங்களிலும், கர்த்தராகிய இயேசுவின் பிதாவாகிய தேவனிடத்தில் அவர் ஜெபித்தார் (எபே. 1:17; 3:15; கொலோ. 1:5). நாம் இனி இயேசுவிடம் ஜெபிக்கத்தேவையில்லை. ஆனால், அவருடைய நாமத்தில் பிதாவிடம் ஜெபிக்க வேண்டும் என்று இயேசுவே சொல்லியிருக்கிறார் (யோவா. 16:23–27). தேவனுடைய நிறுவன அமைப்போடு நாம் சேர்ந்து, இயேசுவின் நாமத்தில் பிதாவோடு ஜெபிக்க வேண்டும். சில கிறிஸ்தவர்கள் தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய அளவு பதிலை பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் கர்த்தராகிய இயேசுவிடம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தம்முடைய வாழ்க்கையின் மூலம் பிதாவை நமக்கு வெளிப்படுத்திக் காட்டுவதே, இயேசு வந்ததின் நோக்கமாகும் (யோவா. 17:3, 4).

### *இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது*

அநேக கிறிஸ்தவர்கள் 'இயேசுவின் நாமத்தில்' என்ற வார்த்தைகளை, அதின் அர்த்தத்தை விளங்கிக்கொள்ளாமலே உச்சரிக்கின்றனர். தொழில் நடத்துவதிலோ அல்லது கட்டளைக் கொடுப்பதிலோ ஒரு நபருடைய பெயரை உபயோகிப்பது என்பது, அந்த பெயரை உடையவர் அந்த நபருடைய சார்பில் அந்த தொழிலை நடத்துவது அல்லது கட்டளைக் கொடுப்பது ஆகும்.

வனாந்திரத்தில் இஸ்ரவேலர்களோடு போக, தேவன் தம்முடைய தூதனை அனுப்பினபோது, அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து அவர் வாக்குக்குச் செவிகொடு, அவரைக் கோபப் படுத்தாதே. ஏனெனில், என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது என்று தேவன் சொன்னார் (யாத். 23:21). தேவதூதன் தேவனுடைய முழு பிரதிநிதியாக மாறுகிறார். தேவதூதனை கோபப் படுத்துவது, தேவனைக் கோபப்படுத்துவதற்கு சமம். தண்டிப்பதற்கும் அந்த தூதனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது என்பது தெளிவாகிறது (யாத். 23:21).

மார்ப்பதக்கத்திலும் தோள்களிலும், இஸ்ரவேலருடைய பன்னிரண்டு கோத்திரங்களின் பெயர்களையும் தரித்துக்கொள்ளும்படி ஆரோன் ஏற்படுத்தப்பட்டார். தேவனுக்கு முன்பாக எல்லா இஸ்ரவேல் கோத்திரங்களின் பிரதிநிதியாக அவர் நியமிக்கப்பட்டார் (யாக். 28:12, 29). கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பெயரை நாம் ஜெபத்தில் உபயோகிக்கும்போது, இயேசுவே ஜெபிப்பதுபோல நாம் தேவனுடைய சிங்காசனத்திற்கு வருகிறோம். நம்முடைய சொந்த தகுதி, நீதி அல்லது திறமை மூலம் நாம் தேவனை அணுகாமல், இயேசுவுக்கு பிதாவினிடத்தில்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

இருக்கிற சிலாக்கியம், அவரிடம் போகும் வாய்ப்பிற்குரிய உரிமை ஆகியவை மூலம் சேருவதற்கு வகை தேடுகிறோம்.

இயேசுகிறிஸ்துவின் மரணத்தோடும், உயிர்த்தெழுதலோடும் நம்மை அடையாளப்படுத்திக் கொள்வதின் மூலம் இது சாத்தியமாகிறது. நாம் அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப் பட்டிருக்கிறோம் (ரோம. 6:4–6). உன்னதங்களில் கிறிஸ்துவோடு உட்காரவும் வைக்கப்பட்டிருக் கிறோம் (எபே. 2:7). உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நாம் ஆசீர் வதிக்கப்பட்டிருக்கிறோம் (எபே. 1:3). நாம் சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாய் இருக்கிறோம் (ரோம. 8:16, 17). இயேசு வைத்திருக்கும் அனைத்தும் நமக்கும் உரியதாகும்.

பழைய உடன்படிக்கையில், தேவனுடைய சிங்காசனத்தைச் சேருவது கடின பாரமான ஒன்றாக இருந்தது. தங்கள் விண்ணப்பத்தை தேவனிடத்தில் வைக்கும் முன், இஸ்ரவேலர்கள் பலவிதமான பலிகளைச் செலுத்த வேண்டியதாயிருந்தது. பாவத்தின் தடுப்பினாலேயே இவைகள் எல்லாம் செய்யப்பட்டன. இரத்தத்தின் பாதுகாப்பு இல்லாமல் தேவனை சேருவது ஆபத்தானது. இயேசுகிறிஸ்து நமக்காக பலி ஆட்டுக்குட்டியாக மாறினார் (எபி. 9:26). இயேசுவின் நாமத்தை உபயோகிப்பதினால் தேவன் நம்மை ஏற்றுக்கொள்வார் என்பதை அறிந்து, நாம் தேவனுடைய சிங்காசனத்தை நெருங்க முடியும்.

இயேசுவின் நாமத்தை உபயோகிப்பது, தேவனிடத்தில் நம்முடைய விண்ணப்பங்களை வைக்கும் சிலாக்கியத்திற்கு மட்டும் பொருந்தாது. நம்முடைய ஜெபங்கள் நிச்சயம் கேட்கப்படும் என்ற அறிவை அது குறிக்கிறது. ஏனெனில், இயேசுவின் நாமத்தில் செய்யப்படும் எந்த விண்ணப்பத்திற்கும் 'இல்லை' என்று தேவன் எப்போது சொல்லமாட்டார். தங்கள் ஜெபத்திற்கு பதில் பெறாத கிறிஸ்தவர்களின் பிரச்சனை என்னவென்றால், அவர்கள் வாய் 'இயேசுவின் நாமத்தில்' என்று சொன்னாலும், அவர்கள் ஜெபங்கள் இயேசுகிறிஸ்துவின் பிரதிநிதித்துவமாக இல்லை. உண்மையாக சொல்லப்போனால், இயேசுகிறிஸ்துவின் சித்தத்தையோ, ஆள்தத்துவத்தையோ பிரதிநிதித்துவமாக ஒரு ஜெபம் கொண்டிருக்கவில்லை யானால், ஜெபிக்கும் அந்த நபர் இயேசுவின் நாமத்தை உபயோகிக்க எந்த உரிமையும் இல்லை. ஏனெனில், இயேசு பிரதிநிதியாக இருப்பவைகளுக்கு அது எதிரிடையாக இருக்கிறது.

இந்த சத்தியத்தின் நேர்மறையான பக்கம் என்னவெனில், இயேசுகிறிஸ்துவின் ஆள்தத்துவத்தையும், சித்தத்தையும், பிரதிநிதித்துவமாக கொண்ட எல்லா ஜெபங்களுக்கும், பிதாவாகிய தேவன் 'ஆம்', 'ஆமென்' என்கிற எதிரொலியோடே கண்டிப்பாக பதிலளிப்பார். ஜெபத்தில் இயேசுகிறிஸ்துவின் நாமம் உபயோகிக்கப்படுவதை பிதாவாகிய தேவன் கேட்கும்போது, தம்முடைய முழுக்கவனத்தையும் செலுத்தி, பரலோகத்திலிருக்கும் எல்லா சிருஷ்டிகளையும் அனுப்பி அந்த விண்ணப்பத்தை அவர் நிறைவேற்றும் வல்லமை, இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்கு இருக்கிறது.

சில வேதாகம மொழிபெயர்ப்புகள் யோவான் 16:23ல் உள்ள இயேசுவின் நாமத்தின் வல்லமையை இவ்வாறாக வெளிப்படுத்துகின்றன:

ஆம்ப்ளிபைய்ட் மொழியாக்கம்
நான் யார் என்பதை முழுவதும் சமர்ப்பிக்கும் என் நாமத்தில் நீங்கள் கேட்டுக்கொள்வதை எல்லாம், என் பிதாவானவர் உங்களுக்கு அருளிச் செய்வார் என்று, நான் உங்களுக்கு நிச்சயப்படுத்தி, அதிக ஆழமான உண்மையோடு உங்களுக்கு சொல்கிறேன்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

சார்லஸ் பி. வில்லியம்ஸ் மொழிபெயர்ப்பு
என்னுடைய பெயரைத் தரித்துக்கொண்டவர்களாய், அவரிடத்தில் எவைகளை எல்லாம் கேட்பீர்களோ, அவைகளை என் பிதா உங்களுக்கு கொடுப்பார் என்று, நான் ஆழமான உண்மையோடு உங்களுக்கு சொல்லுகிறேன்.

கென்னத் எஸ். வியூஸ்ட் மொழிபெயர்ப்பு
அதிக நிச்சயமாக நான் உங்களுக்கு சொல்லிக்கொள்வது என்னவெனில், பிதாவின் மதிப்பீட்டில் நான் என்னவாகவெல்லாம் இருக்கிறேன் என்பதை கருத்தில் கொண்டு, நீங்கள் பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்வதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார்.

பரமண்டலங்களில் தேவசித்தம் செய்யப்படுவதுபோல, பூமியிலேயும் செய்யப்படும்படியான காரியங்களுக்காக, எப்படி ஜெபிக்க வேண்டும் என்று நமக்குக் கற்றுத்தர, பரிசுத்த ஆவியானவரை நாம் அனுமதிக்க வேண்டும். சூப்பர் மார்க்கெட் கடையைப்போல் பரலோகத்தின் கதவுகளைத் தகர்ப்பதை பார்க்கிலும், தேவனோடு முதலாவது ஐக்கியம் வைத்துக் கொள்வதே இரகசியமாகும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

## *அத்தியாயம் 2*

# பல்வேறுவகையான ஜெபங்கள்

தேவனிடத்தில் ஜெபிக்கும் சகலவிதமான வேண்டுதலைக் குறித்தும் பவுல் பேசுகிறார் (எபே. 6:18). அதே வசனத்தில் சார்லஸ் பி. வில்லியம்ஸ் அவர்களின் மொழிபெயர்ப்பு 'ஒவ்வொரு வகையான ஜெபத்தோடும் வேண்டுதலோடும், ஒவ்வொரு வாய்ப்பிலும்' என்று சொல்லுகிறது. ஆம்ப்ளிபைய்ட் மொழிபெயர்ப்பு 'எல்லா வகை ஜெபமும் வேண்டுதலும்' என்று சொல்கிறது. அந்த அர்த்தத்தின் விளக்கம் தெளிவாக உள்ளது. ஒன்றுக்கும் மேற்பட்ட அமைப்பு அல்லது வகையான ஜெபத்தைப் பற்றிப் பவுல் பேசுகிறார். வெவ்வேறு வகையான ஜெபங்கள் வெவ்வேறு வகையான சூழ்நிலைகளில் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு வகையான ஜெபத்தின் விதிகளும், அதில் பயன்படுத்தப்படும் கொள்கைகளின் நிமித்தமாக வேறுபட்டவைகளாக உள்ளன.

### *விசுவாசத்தின் ஜெபம்*

தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்வதே, விசுவாச ஜெபத்தின் அடிப்படை வேலையாகும். விசுவாச ஜெபத்தை நாம் ஜெபிக்கும் முன்பதாக, நாம் செய்யும் வேண்டுதல் கள் எல்லாம், எழுதப்பட்ட தேவ வார்த்தைக்குள் அடங்கியிருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினாலேயே விசுவாசம் வருகிறது (ரோம. 10:17). எழுதப்பட்ட தேவ வார்த்தைக்குள் அடங்கியிராத ஒன்றையும் பெற்றுக்கொள்ள, மற்ற வகை ஜெபங்கள் தேவைப்படுகின்றன.

பேசப்பட்ட வார்த்தை அல்லது தேவனுடைய ரேமா வார்த்தையின் மூலம், விசேஷ வரமாகிய விசுவாசம் செயல்படுகிற இடம் மட்டுமே ஒரே விதிவிலக்காகும். இப்பொழுது அது பேசப்பட்ட வார்த்தையின் மேல் இருக்கிறது என்பதைத் தவிர, அதன் அடிப்படை இன்னும் தேவ வார்த்தையின் மேலேயே இருக்கிறது. இவைகள் எல்லாம் கடைப்பிடிக்க வேண்டிய முன்மாதிரி கள் அல்ல, விதிவிலக்குகள் ஆகும். தண்ணீரின்மேல் நடப்பதற்கு பேதுரு இயேசுவிடமிருந்து அனுமதி வேண்டியது ஒரு உதாரணமாகும் (மத். 14:28). அந்த பதிலும் கட்டளையும் பேதுருவுக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டது (மத். 14:29). பேதுருவைத் தவிர மற்ற எவரும் தண்ணீரின்மேல் நடக்க முயற்சித்திருப்பார்களானால், அவர்கள் மூழ்கிப்போய் இருந்திருப்பார்கள்.

தங்கள் உறுதியான நம்பிக்கைகள் அனைத்தும் விசுவாசமாகத்தான் இருக்க வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் அநேக நேரங்களில் நினைக்கின்றனர். விசுவாசத்திற்கு உறுதியான நம்பிக்கையும், நிச்சயமும் இருக்கிறது (எபி. 11:1). ஆனால், எல்லா உறுதியான நம்பிக்கையும், நிச்சயமும் தேவ வார்த்தையில் இருந்து வருவதில்லை. சில நம்முடைய குருட்டுத்தனமான ஆர்வத்திலிருந்தும், முட்டாள்தனமான யூகங்களில் இருந்தும் வருகின்றன. அப்படிப்பட்ட உறுதியான நம்பிக்கைகள் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கு ஒத்துவராததால், அவைகள் விசுவாசம் அல்ல என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம்.

குடும்ப கட்டுப்பாட்டிற்காக சில கிறிஸ்தவர்கள் விசுவாசத்தின் மூலம் தேவனை விசுவாசிக்கின்றனர். பிள்ளை பெறாமலிருக்க, பிறப்பைக் கட்டுப்படுத்தும் எந்த முறைகளை யும் கடைபிடிக்காமல், விசுவாசத்தை அப்பியாசிக்கின்றனர். இது தேவ வார்த்தைக்கு ஒரு நேரடியான எதிர்ப்பு ஆகும். பிள்ளைகள் தேவனிடத்திலிருந்து வரும் ஆசீர்வாதமாக தேவ வார்த்தை வாக்குபண்ணுகிறது. மேலும், மலடாக இருப்பது சரீரத்தின் இயற்கைக்கு மாறான நிலையாகும். பூரணமான சரீரம் செழுமையானது. அப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் எதை விதைக்கிறார் களோ அதையே அறுப்பார்கள். மற்றும் திட்டமிடாத பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வார்கள். இது விசுவாசமல்ல; இது யூகமே.

விசுவாச ஜெபத்தில் 'ஆகில்' (if) என்ற வார்த்தைக் குறிப்பிடப்படவே கூடாது. 'ஆகில்' என்ற வார்த்தை சந்தேகத்தைக் குறிக்கிறது. தாங்கள் விண்ணப்பிக்கும் பகுதியைக் குறித்து

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

‘ஆகில்’ என்ற வார்த்தை இல்லாமல் ஜெபிக்க முடியாதவர்கள், தாங்கள் விண்ணப்பிக்கும் பகுதியைக் குறித்த தேவ சித்தத்தை நிர்ணயித்துக்கொள்ள முதலில் தேவ வார்த்தையைப் படிக்க வேண்டும். விசுவாச ஜெபத்தின் கீழ் வைக்கப்படும் விண்ணப்பங்களுக்கு வேத வாக்கியங்களும், வசனமும் இருக்க வேண்டும்.

மாற்கு பதினோராம் அதிகாரம் இருபத்து மூன்று மற்றும் இருபத்து நான்காம் வசனங்களில், விசுவாச ஜெபம் சுருக்கி எழுதப்பட்டுள்ளது. நம்முடைய இருதயத்தில் முழுவதுமாக சந்தேகமில்லாமலிருப்பதே, விசுவாச ஜெபத்திற்கு தேவையாயிருக்கிறது. நம்முடைய இருதயத் தில் சந்தேகப்படாமலிருந்தால், நம்முடைய வார்த்தைகளின்படியே நடக்கும் என்று இயேசு கூறினார் (மாற். 11:23). மாற்கு பதினோராம் அதிகாரம் இருபத்து நான்காம் வசனம், கிரேக்க மொழியில் மூன்று காலங்களை சொல்ல உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

முதலாவது நிகழ்காலம் – நீங்கள் ஜெபம்பண்ணும்போது; இரண்டாவது கடந்த பூரண காலம் – அவைகளை இப்பொழுது பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள்; மூன்றா வது எதிர்காலம் – அவைகள் உங்களுக்கு உண்டாகும். நாம் ஜெபிக்க ஆரம்பித்த நேரத்திலிருந்து (குறிப்பு அ) பதில் வெளிப்படும் நேரம் வரைக்கும் (குறிப்பு ஆ) நாம் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசிக்க வேண்டும். ஜெபம் ஒரே ஒரு முறை மாத்திரமே செய்யப்படுகிறது. விசுவாச ஜெபத்தில், பெற்றுக்கொள்ள நீங்கள் ஏழு முறை ஜெபித்தீர் களானால், ஆறு முறை அவிசுவாசத்தில் இருந்திருக்கும்.

விசுவாச ஜெபத்தை ஜெபித்த பின்பு, குறிப்பு அ–விற்கும், குறிப்பு ஆ–விற்கும் இடையே விசுவாச நிலையை, தேவ வார்த்தையை தியானிப்பதன் மூலமாகவும், வாக்குத்தத்தங்கள் நிறைவேறுதலை காட்சியாகப் பார்ப்பதின் மூலமாகவும், மற்றும் பதிலுக்காக நன்றியையும் துதியையும் செலுத்துவதின் மூலமாகவும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இல்லாதவை களை, இருக்கிறவைகளைப்போல அழைக்க ஆரம்பிக்க வேண்டும் (ரோம. 4:17). நம்மை வெளிப்படுத்த புதிய சொல் அகராதியும் இதற்கு தேவையாயிருக்கும். உதாரணத்திற்கு, “எனக்கு சுகமில்லை” என்று நாம் சொல்லமாட்டோம். ஆனால், “இயேசுவின் தழும்புகளால் நான் சுகமானேன் என்று விசுவாசிக்கிறேன்” என்று சொல்வோம்.

கிறிஸ்தவ விஞ்ஞானமாகிய துர் பக்திக்காரரைப்போல நாம் வியாதி இருப்பதையே மறுக்கப்போவதில்லை, ஆனால் அந்த சுகவீனம் நம்முடைய சரீரத்திலிருப்பதற்கான உரிமையை நாம் மறுக்கிறோம். “எனக்கு வியாதி இல்லை” அல்லது “நான் ஏற்கனவே சுகமாகியிருக்கிறேன்” என்று நாம் சொல்ல முடியாது. ஆனால், “இயேசுவின் தழும்புகளால் நான் சுகமாகிறேன் என்று விசுவாசிக்கிறேன்” என்று நாம் சொல்ல முடியும். அது வெளிப்படுத்தலில் இருப்பதாக நாம் அறிக்கையிடவில்லை, உணர்வு மண்டலத்தில் உள்ள சூழ்நிலைகளையும் நாம் அறிக்கை யிடப்போவதில்லை. ஆனால், நாம் விசுவாசிப்பதை நாம் அறிக்கையிடுகிறோம்.

நாம் விசுவாச ஜெபத்தை ஜெபிக்கும்போது நாம் என்ன சொல்கிறோம் என்பதைக் குறித்து அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். குறிப்பு அ–விற்கும் குறிப்பு ஆ–விற்கும் இடையில், நாம் என்ன சொல்கிறோம் என்பதைப் பொறுத்தே, விசுவாச ஜெபத்தின் வெற்றியும் இருக்கிறது. இயேசு விசுவாச ஜெபத்தை குறிப்பிடும்போது, நம்முடைய வார்த்தைகளின் முக்கி யத்துவத்தை மூன்று முறை வலியுறுத்துகிறார் – எவனாகிலும் சொல்லி... தான் சொன்னபடியே... அவன் சொன்னபடியே ஆகும் (மாற். 11:23). அலைபாயாத ஒரே மனதோடு கூடிய விடாமுயற்சியே, வெற்றியுள்ள விசுவாச ஜெபத்திற்கு தேவையானதாகும் (யாக். 1:6–8)

### *அர்ப்பணிப்பின் ஜெபம்*

தேவனுடைய சித்தத்திற்கு ஒட்டுமொத்தமான ஒப்புவித்தலைக் கொண்டுவருவதே, இந்த ஜெபத்தின் குறிக்கோள் ஆகும். இந்த வகை ஜெபத்தில், ‘ஆகில்’ (if) என்ற வார்த்தையை உபயோகிப்பது முற்றிலும் சரியானதே. ஒரே முறை செய்ய வேண்டிய ஜெபம் இதுவல்ல. தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலும் ஒட்டுமொத்தமாக அர்ப்பணிக்க இது தொடர்ந்தேச்சையாக

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

அப்பியாசிக்க வேண்டிய ஜெபம் இது. நாம் தேவனுக்குள் வளரும்போது, மற்றும் அதிகம் அதிகமாக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்போது, அந்த விகிதத்திற்கேற்றபடி நாம் தேவனுக்கு ஒப்புவிக்க அதிகமதிகமான காரியங்கள் இருக்கும்.

விடலைப் பருவத்திலுள்ள ஒருவர், ஒரு வெற்றியுள்ள கோடீஸ்வரனை விட குறைவாக ஒப்புவிக்க வேண்டும். அறியப்படாதவர்களை விட பிரபலமானவர்கள் அதிகமாக ஒப்புவிக்க வேண்டும். இயேசுவைப் பற்றி அவரை அறிய வரும் ஒவ்வொரு மனிதனும் மனுஷியும், அவனுடைய அல்லது அவளுடைய வாழ்வை ஒப்புவிக்க வேண்டுமென்பதே இயேசுகிறிஸ்து வுக்கு தேவையாகும். நம்முடைய வாழ்வில் இரண்டாவது இடத்தை இயேசு ஏற்றுக்கொள்ள மாட்டார். நம்முடைய தகப்பன்மார்கள், தாய்மார்கள், மனைவிகள் (அ) கணவன்கள், குமாரர்கள் மற்றும் குமாரத்திகள் எல்லாரையும் விட நாம் இயேசுவை அதிகமாக நேசிக்க வேண்டும் (மத். 16:37; லூக். 14:26).

சீஷத்துவத்தைக் குறித்து பேசும்போது, இயேசு 'வெறுத்தல்' என்னும் வார்த்தையைக் கூடப் பயன்படுத்துகிறார் (லூக். 14:26). நம்முடைய குடும்பத்தை வெறுக்கும்படி இயேசு நம்மிடம் கேட்கவில்லை. அதைவிட நாம் அவர்மேல் வைத்திருக்கும் அன்பு, நம்முடைய குடும்பத்தின்மேல் வைத்திருக்கும் அன்புடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, உன்னதமானதாக இருக்க வேண்டும். அன்பிற்கும் வெறுப்பிற்கும் உள்ள மகா இடைவெளிபோல், தேவன் மீதுள்ள நம்முடைய அன்பிற்கும், நம்முடைய சொந்த குடும்பத்திற்குமுள்ள மகா இடை வெளிபோல் இருக்கிறது.

பரிசுத்தமாக்கப்பட்ட மற்றும் ஒப்புவிக்கப்பட்ட நிலையை பராமரிக்கும் திறவுகோல், அர்ப்பணிப்பின் ஜெபமே. கெத்செமனே தோட்டத்தில் இயேசு, பிதாவின் சித்தத்திற்கு புத்துணர்வோடு தம்மை அர்ப்பணித்தார் (லூக். 22:42). 'ஆகில்' (if) என்ற வார்த்தையோடு இந்த ஜெபத்தை அவர் ஜெபித்தார். பிதாவின் சித்தமாயிருக்கும் வரை, பிதாவானவர் விரும்பும் எந்த பகுதிக்குள்ளும் வழிகளுக்குள்ளும் செல்ல, இயேசுவானவர் விருப்பமுள்ள வராக இருந்தார்.

அர்ப்பணிப்பின் ஜெபத்தை ஜெபிக்கும்போது, நாம் நம்முடைய சித்தத்தை நடுநிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். எந்தப் பகுதியிலும் தேவ சித்தத்தைத் தேடும்போது இரண்டே இரண்டு தெரிந்தெடுப்புகள்தான் உள்ளன – ஆம் அல்லது இல்லை. 'ஆம்' அல்லது 'இல்லை' இரண்டில் ஒன்றை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளும் நிலையே 'நடுநிலை'. தேவவார்த்தை அமைதியாயிருக்கும் பகுதிகளில், இந்த அர்ப்பணிப்பின் ஜெபம் பயனுள்ளதாக உள்ளது (தேவசித்தத்தை தேவவார்த்தை தெளிவாகக் காட்டும் பகுதிகளில், நாம் விசுவாச ஜெபத்தை ஜெபிக்க வேண்டும்).

உதாரணத்திற்கு, நாம் தெரிந்தெடுக்கும் வேலை, வாங்கும் வீடு, திருமணம் செய்யும் நபர் இவைகளைப் பற்றி தேவசித்தத்தை தேடும்போது, அர்ப்பணிப்பின் ஜெபத்தோடு விண்ணப்பிக்க வேண்டும். நாம் நம்மை அர்ப்பணிக்கும்போது மாத்திரமே, தேவனுடைய சத்தத்தை தெளிவாய் கேட்க முடியும். சிலநேரங்களில் மக்கள், அவர்கள் ஜெபிக்கும் முன்பே, தங்கள் மனதில் ஏற்கனவே நிர்ணயம் பண்ணிக்கொள்வார்கள். தங்களுடைய மீட்டரை 'ஆம்' என்று செட்பண்ணிக்கொள்வார்கள். அதன் விளைவாக அவர்கள் தேவனிட மிருந்து கேட்கவும் முடியாது, இந்த ஜெபத்தை வெற்றிகரமாக ஜெபிக்கவும் முடியாது.

தேவனுடைய சித்தத்தில் இணைவதின் மூலம் தேவனோடு இணைவதே, அர்ப்பணிப்பின் ஜெபத்தினுடைய முடிவான பலனாகும். எந்த ஒரு பெரிய தீர்மானத்தை எடுக்கும் முன்பும், இந்த ஜெபத்தை நாம் ஜெபிக்க வேண்டும். உள்ளான சாட்சியின் மூலம் தேவன் நம்மோடு பேசுவது, உள்ளான சத்தம் அல்லது தேவன் தெரிந்தெடுக்கும் மற்ற ஏதாவது வழியிலோ இந்த ஜெபத்திற்கு பதில்வருகிறது. அந்த பதிலோடு, தேவனுடைய சித்தத்திற்கான

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

நிச்சயமும் வருகிறது. தேவசித்தத்தைச் செய்வதற்கான கிருபையும் பெலனும் கூட, இந்த ஜெபத்திற்கு பிரதியுத்தரமாக கொடுக்கப்படுகிறது.

*பரிந்துபேசும் ஜெபம்*

விசுவாச ஜெபமும் அர்ப்பணிப்பின் ஜெபமும், ஜெபிக்கும் நபரின் தனிப்பட்ட வாழ்வையே பொதுவாக உள்ளடக்கியிருக்கும். மற்றவர்கள் நம்முடன் உடன்பட்டிருக்கும்போது மாத்திரமே, இந்த இருவகை ஜெபங்களையும் மற்றவர்களுக்கு பயன்படுத்த முடியும். ஒரே காரியத்தில் உடன்படாத மற்றொரு நபருக்கு, நாம் விசுவாச ஜெபத்தை ஜெபிக்க முடியாது. மற்றவர்களின் சுயதெரிந்தெடுப்பை நாம் மீற முடியாது.

எனினும் பரிந்துபேசும் ஜெபமானது, குறிப்பாக மற்ற நபருக்கும், குடும்பத்திற்கும், நகரத்துக்கும் அல்லது தேசத்துக்குமான ஜெபமாகும். பரிந்துபேசும் ஜெபங்கள் மற்றொரு நபரின் சித்தத்தை உள்ளடக்கியிருக்கிறது. எனவே விரும்பப்பட்ட பதில் வரும்வரை, அது தொடர்ச்சியாக தூண்டப்பட்டுக்கொண்டிருக்க வேண்டும். பேதுருவுக்காக ஜெபிக்கும்போது, சபையானது பரிந்துபேசும் ஜெபத்தையே கடைபிடித்தது (அப். 12:5). விசுவாச ஜெபத்தைப் போலல்லாது பரிந்துபேசும் ஜெபம், தேவனுக்கு முன்பாக தொடர்ந்து விண்ணப்பங்களைக் கொண்டவரும். அதில் அதிகமானது, பொதுவாக ஆவியில் ஜெபிப்பதாகும். இந்தக் காரணத்திற்காக, பேதுரு தேவதூதனால் விடுவிக்கப்பட்ட பின்பும், சபையானது இன்னும் தொடர்ந்து ஜெபித்தக்கொண்டிருந்தது (அப். 12:12).

பரிந்துபேசும் ஜெபத்தை வெற்றிகரமாக மாற்றக்கூடிய மூன்று காரியங்கள் இருக்கின்றன: ஒரு தெளிவான குறிக்கோள், விடாப்பிடியான உறுதி மற்றும் ஆவியில் ஜெபிப்பது. ஒரு தெளிவான குறிப்கோளை பெற, நாம் பரிந்துபேசும் காரியத்துடன் அடையாளம் காட்டவோ அல்லது ஒருமைப்பாட்டை காட்டவோ நாம் தகுதியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் பரிந்துபேசும் காரியத்துடன் அடையாளப்படுத்திக்கொள்ளும் ஆற்றல், பரிசுத்த ஆவியானவர் மூலம் வழங்கப்படுகின்றது. மனதுருக்கத்தை 'பரிந்துபேசும் உணர்வு' என்று நாம் அடையாளம் காணலாம். நாம் பரிந்துபேசும் காரியம் உணர்வதை நாம் உணரலாம், நினைக்கலாம் மற்றும் அனுபவிக்கலாம்.

இயேசு தாம் ஊழியம் செய்தவர்களுக்கெல்லாம், தொடர்ந்து மனதுருக்கத்தோடு செயல் பட்டார் (மத். 9:36; 14:14; 15:32; 18:27). இயேசுகிறிஸ்து நம்முடைய பிரதான ஆசாரியராய், பரலோகத்தில் பரிந்துபேசுபவராய் இருக்கக்கூடியதின் காரணம், அவர் இன்னும் தம்மை நம்மோடு கூட அடையாளப்படுத்திக் கொள்ள முடியும் (எபி. 4:15; 7:25).

விடாப்பிடியான உறுதி, பெரிய பொறுமையை உள்ளடக்கியது. மக்களுக்கு சுயமாக தெரிந்துகொள்ளும் உரிமை இருக்கிறது. எனவே அவர்களை தேவ சித்தத்திற்குள் வரவழைக்க, பரிந்துபேசும் ஜெபம் நேரமெடுத்தக்கொள்கிறது. பரிசுத்தவான்களுக்காக ஜெபிக்கும்போது, பவுலே இடைவிடாமல் ஜெபிக்கிறார் (எபே. 6:18; கொலோ. 1:5, 9; 1 தெச. 5:17; 2 தெச. 1:12). வழக்கமான ஜெபநேரங்களை நாம் பரிந்துபேசும் காரியங்களுக் காக ஒதுக்கிக்கொள்ள வேண்டும். வழக்கமான பரிந்துபேசும் நேரங்களோடு, நாம் உபவாசத்தையும் கூட்டிக்கொள்ள வேண்டும்.

பரிந்துபேசும் ஜெபத்திற்கு தேவையான விடாமுயற்சி, ஒருவகை பெரிய நாயின் விடா முயற்சியைப் போன்றது. புல்டாக் என்றழைக்கப்படும் பெரிய நாய் கடிக்கும்போது, அது தன்னுடைய இரையை ஒருபோதும் தப்பிப்போக விடாது. தன்னுடைய தாடையை எதிரியின்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

உடலுக்குள் பதித்து மாட்டிவிடும். நம்முடைய பரிந்துபேசுதலின் குறிக்கோளை அடையும் வரை, நாம் நம்மை தீவிரமான தீர்மானத்திற்குள் மாட்டிக்கொள்ள வேண்டும். செய் அல்லது செத்துமடி என்னும் உணர்வோடு அது ஜெப ஊழியத்தில் இணைவதாகும்.

அந்நியபாஷையில் ஜெபிப்பதை உள்ளடக்கிய ஆவியில் ஜெபிப்பது என்பது, ஆவிக்குரிய ஊடுருவலுக்கான திறவுகோல் ஆகும். பவுல் அந்நியபாஷையில் அதிகமாய் ஜெபித்தார். எல்லா கொரிந்தியர்களும் சேர்ந்த ஜெபித்ததைவிட அதிகமாக ஜெபித்ததாக சொன்னார் (1 கொரி. 14:18). பரிந்துபேசும் காரியத்திற்கான பதிலைப் பெற்றுக்கொள்ள தேவையான அனைத்தையும் நாம் முழுமையாக விளங்கிக்கொள்ள முடியாது. நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். அவர் எல்லா பரிசுத்தவான் களுக்காகவும் பரிந்துபேச நமக்கு உதவி செய்ய முடியும் (ரோம. 8:27).

நாம் பரிசுத்த ஆவியானவரைக் குறித்த உணர்வில் அதிகமாய் வளரும்போது, பலவிதமான மக்களை நம்முடைய ஜெபத்தில் தாங்க, அவர் கொடுக்கும் மென்மையான தூண்டுதல்கள் அல்லது பாரங்களுக்கு கீழ்ப்படிய, நாம் கற்றுக்கொள்ள முடியும். பரிசுத்த ஆவியானவர் மூலம் அந்நியபாஷையில் பரிந்துபேசுவது, நம்முடைய வரையரைக்குட்பட்ட, எல்லைக்குட் பட்ட மனதோடு பரிந்துபேசுவதை விட, அதிக உயரம் கடந்து சென்று மிகப்பெரிய பதிலைப் பெற்றுக்கொள்ளும்.

*மனஒற்றுமையின் ஜெபம்*

விசுவாச ஜெபத்தின் பெருக்கமே, உடன்பாட்டின் ஜெபம். இருவர் அல்லது அதிகமான மக்கள் கூடி ஜெபிக்கும்போது, விசுவாச ஜெபம் வெளிப்படுத்தும் வல்லமை, அதிக அதிகமான மடங்கு பெருக்கப்படுகிறது. பரலோகத்தைக் கூட அசைக்கக் கூடிய பயங்கரமான வல்லமையை மன ஒற்றுமையின் ஜெபம் கட்டவிழ்க்கிறது. கிறிஸ்தவர்கள் ஒன்றுபடும்போது, பிசாசுகள் தங்களுக்கு விரோதமாய் கட்டவிழ்க்கப்படும் வல்லமையினிமித்தம் பயப்படுகின்றன.

எதிர்மறையான பக்கத்தில், பாபேல் கோபுரத்தில் மனிதர்களின் வலிமையை ஆண்டவர் குறிப்பிடுகிறார். அவர்கள் நினைத்தது ஒன்றும் தடைபடாது என்று தேவன் கூறுகிறார் (ஆதி. 11:6). நன்மைக்கோ அல்லது தீமைக்கோ, ஒன்றை விட இரண்டு தலைகள் மேலானது என்பதில் சந்தேகமில்லை.

அவருடைய சீஷர்களில் இருவர், தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலுள்ள என் பிதாவினால் அது அவர்களக்கு உண்டாகும் என்று இயேசு கூறினார் (மத். 18:19). இந்த நிபந்தனையோடு கூடிய வாக்குத்தத்தத்திற்கு தேவையான இரண்டுகாரியங்கள்: சீஷர்கள் பூமியிலிருக்க வேண்டும் மற்றும் அவர்கள் ஒருமனப்பட்டிருக்க வேண்டும். பூமியிலே கட்டுவதின் மூலமும் அல்லது கட்டவிழ்ப்பதின் மூலமும், பரலோகத்தில் கட்டவோ கட்டவிழ்க்கவோ இந்த ஜெபத்திற்கு வல்லமை இருக்கிறது; அதாவது ஆவிக்குரிய மண்டலத்தில்.

பழைய ஏற்பாட்டில், உடன்படிக்கையின் மக்களுள் ஒருவர் ஆயிரம்பேரையும், இருவர் பதினாயிரம் பேரையும் துரத்தலாம் (உபா. 32:36). அந்தக் காரணி பத்தால் பெருக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில் நம்முடைய போராயுதங்களும் யுத்தமும் ஆகிய இரண்டும், ஆவிக்குரிய மண்டலத்தில் உள்ளன. ஆயினும், இரண்டு அல்லது அதிகமான கிறிஸ்தவர்கள் ஒருமனதுக்குள் வரும் போது, ஆவிக்குரிய வல்லமை பயங்கரமாக பெருக்கப்படுகிறது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

ஒரு முழு கிறிஸ்தவ சமுதாயமோ அல்லது ஒரு முழு சபையோ ஒருமனதுடன் கூடிவரும் போது வெளிப்படும் வல்லமையை கற்பனை செய்துபாருங்கள்.

'ஒருமனப்படுதல்' என்னும் வார்த்தைக்கு கிரேக்க வார்த்தை 'சும்ப்போனெயோ' (Sumphoneo) அதிலிருந்து ('Symphony') 'இசைவு' என்ற வார்த்தையை நாம் பெறுகிறோம். எந்த முரண்பாடும் இல்லாத சங்கீத இசைப்பொருத்தம் போல, மன ஒற்றுமை முழுமையாக இருக்க வேண்டும். இயேசு தம்முடைய ஜெபத்தில், சபை ஒன்றாயிருப்பதையும், தேவனுடைய மகிமையையும், உலகத்திற்கு சாட்சியாயிருப்பதையும் தொடர்புபடுத்துகிறார் (யோவா. 17:22, 23). சபை ஒன்றாயிருக்கும்போது, தேவனுடைய வல்லமையும், அவருடைய மகிமையும் முழுவதும் வெளிப்படுத்தப்படும். இயேசுகிறிஸ்து இராஜாதி இராஜா மற்றும் கர்த்தாதி கர்த்தர் என்பதை இந்த உலகம் அறிந்துகொள்வதே முடிவான அதன் பலன் ஆகும்.

*பிரசவவேதனைப்படும் ஜெபம்*

பிரசவவேதனைபடும் ஜெபம், ஆவியில் பெருமூச்சுவிடுவதாகும். கலாத்தியருக்காக திரும்பவும் கர்ப்ப வேதனைப்படுவதாக பவுல் கூறினார் (கலா. 4:19). முன்பு, தேவனுடைய இராஜ்ஜியத்தில் கலாத்தியர்களின் ஆவிக்குரிய பிறப்பிற்காக பவுல் கர்ப்பவேதனைப்பட்டதை இது குறிக்கிறது. இதை எழுதும்போது கலாத்தியர்கள் கிறிஸ்துவைப்போல் பூரணமாய் இருக்க, மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறார்.

தேவனுடைய இராஜ்ஜியத்தில், குடிபெயர்தல் அனுமதிக்கப்படுவதில்லை. ஆத்துமாக்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிறந்தே ஆகவேண்டும் (யோவா. 3:5). கூட்டங்களினால் ஆத்துமாக்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் அழைத்துவரப்படுகிறதில்லை; முதலில் ஆவிக்குரிய மண்டலத்தில் அவர்களுக்காக கர்ப்பவேதனைப்படுகிறார்கள். யாரோ ஒருவர் அவர்களைப் பெற்றாக வேண்டும். பரிந்துபேசுபவர்களே, கர்ப்பவேதனைப்படும் மண்டலத்தில் நுழைந்து ஆத்துமாக்களைப் பெற்றெடுக்கிறார்கள்.

ஜெபத்தில் பிரசவவேதனைப்படுவது, பயங்கரமான கர்ப்பவேதனையாகும். பவுல் தன்னோடு கூட ஜெபத்தில் பிரசவ வேதனைப்பட்டு உதவி செய்யும் மக்களை உடையவராக இருந்தார். ஆவிக்குரிய மண்டலத்தில் படும் பிரசவ வேதனையைப் பொறுத்தே, எந்த ஒரு ஊழியம் அல்லது சபையின் வெற்றி அமைகிறது. ஊழியங்கள் ஸ்தாபிக்கப்பட்டுவருவதில்லை, அவைகள் பெற்றெடுக்கப்பட்டுவருகின்றன. எந்த ஒரு கூட்டம், கூடுகை, படைமுயற்சி கூட்டங்கள் இவைகளின் வெற்றி, வெறும் நிர்வாகத்தின் மீது மட்டுமல்ல, மாறாக பிரசவவேதனைப்படும் ஜெபத்தின் மீதும் அமைகிறது.

பவுலின் உடன் ஊழியனாகிய எப்பாப்பிராவும் எப்படி ஜெபங்களில் கர்ப்ப வேதனைப்பட்டு போராட வேண்டுமென்று அறிந்திருந்தான் (கொலோ. 4:12). பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வதின் மூலம் பெருமூச்சு விடும் தொடர் நிகழ்வை, பிரசவவேதனை உள்ளடக்கியது (ரோம. 8:26). இவ்வகை ஜெபங்களில் வெற்றியை அடைவதற்கு பெரிய அளவில் பெலனை செலவழிப்பது தேவையாகிறது.

அந்நியபாஷையில் ஜெபிப்பதை, கருத்தாய் ஜெபிப்பதோடு ஒப்பிடும்போது, நவீன விளையாட்டு காருக்கும், மிதிவண்டிக்கும் (சைக்கிலுக்கும்) உள்ள வித்தியாசத்தைப் போன்றது. ஆவியில் பெருமூச்சுவிடுவது, ஒருமணி நேரத்திற்கு ஆயிரம் மைல்கள் அளவில் அந்நியபாஷையில் ஜெபிப்பதாகும். அது மொழிகளுக்கும் மேலாக சென்றடைகிறது. அது தேவனுக்கு முன்பாக ஆத்துமாவை ஊற்றிவிடுவதாகும். இந்த வகை ஜெபத்தில் அதிகமான கண்ணீர் வரும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

உள்ளாகப் பரிசுத்த ஆவியானவருக்கு இணங்குவதை உள்ளடக்கியதுதான் பிரசவ வேதனைப்படும் ஜெபம் ஆகும். அது கர்த்தருடைய பாரத்தை சுமப்பதையும் உள்ளடக்கியது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிந்துபேசும் ஊழியத்தில் பங்கு எடுத்துக்கொள்வதாகும். (ஆவியானவர் ஆவியுடன் தொடர்புகொள்ளும்) ஆவிக்குரிய மண்டலத்தின் ஆழங்களுக்கு இது செல்லுகிறது. முதலில் ஆவியில் அதிகமாய் ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். பின்பு அங்கிருந்து முன்னேறி ஆவியில் பெருமூச்சுவிடவும் கற்றுக்கொள்ளுங்கள்.

ஆவியில் கர்ப்பவேதனைப்படுவது, அதிக வல்லமையான ஜெபங்களில் ஒன்றாகும். தேவனுடைய எல்லா சிருஷ்டிகளுக்கு பூரணத்துவத்தைக் கொண்டுவருவதையும், தேவனுடைய பூரணமான திட்டப்படி எல்லா காரியங்களுக்கம் முழுமையான நிறைவேறுதலைக் கொண்டு வருவதையும் இது உள்ளடக்கியது (ரோம. 8:22, 23, 26). தேவனிடத்தில் அன்பு கூருகிறவர் களுக்கு சகலத்தையும் நன்மைக்கேதுவாக மாற்றுவது இவ்வகை ஜெபமே (ரோம. 8:26–28).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

## *அத்தியாயம் 3*

# துதி மற்றும் ஸ்தோத்திர ஜெபம்

துதி மற்றும் ஸ்தோத்திர ஜெபம் மற்றவகை ஜெபங்களோடே சேர்ந்து செய்யப்பட வேண்டும். இந்த ஜெபம் மற்ற எந்த வகை ஜெபத்திற்கு முன்பும், பின்பும் செய்யப்பட வேண்டும். இந்த ஜெபம் இல்லாமல் தேவனுடைய சிங்காசனத்தில் நுழைய முடியாது. அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசிக்க தேவன் நியமித்திருக்கிறார் (சங். 100:4).

### *தூப பீடம்*

மோசேயின் ஆசரிப்புக்கூடாரத்தில் தூப பீடமானது மிகவும் சிறியதும், ஆனால் உயரமான மரத்தால் ஆன உபகரணமாயிருந்தது (யாத். 37:25). வெண்கல பீடம் போல அதின் நான்கு மூலைகளிலும் நான்கு கொம்புகள் இருந்தன. அந்த வெண்கல பீடத்தின் நான்கு கொம்பு களும், பூமியின் நான்கு மூலைகளுக்கும் சுவிசேஷம் செல்வதைக் குறிக்கும். தூப பீடத்தின் நான்கு கொம்புகளும், பூமியின் நான்கு மூலைகளுக்கும் துதி ஆராதனை கடந்து செல்வதைக் குறிக்கிறது.

பிரதான ஆசாரியன் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்போதெல்லாம், தூப கலசத்தில் பலிபீடத்தின் மேலுள்ள நெருப்புத்தணலையும், கைப்பிடி நிறைய சுகந்த தூபவர்க் கத்தையும் கொண்டு செல்ல வேண்டும். மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தவுடன், தூப மேகம் அவனை மூடும்படியாக உடனடியாக சுகந்த தூபவர்க்கத்தை நெருப்புத் தணலின் மேல் போட வேண்டும் (லேவி. 16:12). தூப மேகமானது கிருபாசனத்தை மூடாவிட்டால், அவன் இறந்துவிடுவான் (லேவி. 16:13).

தூப பீடமும் தூபவர்க்கமும், துதியையும் ஆராதனையையும் குறிக்கிறது. துதியும் ஆராதனையும் இல்லாமல், ஒருவரும் அவருடைய பரிசுத்த பிரசன்னத்தில் நுழைய முடியாது. அது நம்மை மூடும் போர்வையும், பாதுகாப்பும் ஆகும். துதியினாலும் ஆராதனை யினாலும் மூடிக்கொள்ளாமல், அவருடைய பிரசன்னத்தில் நுழையும் எவரும் சாகத்தக்கதான அளவிற்கு, சர்வ வல்லமையுள்ள தேவன் பரிசுத்தமும், வல்லமையுள்ளவர்.

### *துதியின் மூடுதல்*

தம்முடைய ஜனங்களின் துதிகளுக்குள் தேவன் வாசமாயிருக்கிறார் (சங். 22:3). நாம் அவரை துதித்து ஆராதிக்கும்போதெல்லாம், அவர் தம்முடைய பிரசன்னத்தை வெளிப்படுத்து கிறார். நாம் துதித்து ஆராதித்த பின்பு தேவன் தம்மை வெளிப்படுத்துகிற காரணம் என்னவென்றால், துதியின் ஆடையால் நாம் நம்மைப் போர்த்திக்கொள்ளாமல் இருக்கும் போது, அவருடைய மகிமை நம்மைக் கொன்றுவிடும். மக்கள் அதை விளங்கிக் கொள்வ தில்லை. ஆனால் தேவனுடைய கிருபையினால்தான் தேவன் தம்முடைய பிரசன்னத்தைக் காண்பிப்பதில்லை. துதியும் ஆராதனையும் இல்லாமல் அவருடைய பிரசன்னம் வருமானால் நாம் இறந்து விடுவோம்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

நம்மை நேசிக்கவும், தழுவிக்கொள்ளவும், தம்முடைய பக்கத்தில் வைத்துக்கொள்ளவும் எந்த அளவு தேவன் வாஞ்சித்து ஏங்குகிறாரோ, அதே அளவு நம்முடைய பாதுகாப்பிற்காக, தம்மை ஒதுக்கிக்கொள்கிறார். அவருடைய தகப்பன் – உள்ளம் நமக்காக ஏங்கினாலும், அவரை ஏற்றுக்கொள்வதற்கு நம்முடைய குறைகள் நம்மை தகுதியற்றதாக்குகின்றன. பரலோகத்திலுள்ள தேவனுக்கு தொடர்ந்து துதிகள் ஏறெடுக்கப்பட வேண்டும். தூதர்கள் தொடர்ந்து தேவனைத் துதித்துக் கொண்டேயிருக்கிறார்கள் மற்றும் சிங்காசனத்தைச் சுற்றியுள்ள நான்கு ஜீவன்களும் 'சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என்று ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன (வெளி. 4:8). துதியின் போர்வையில்லாமல், பரலோகம் கூட தேவனுடைய மகிமையையும், வல்லமையையும் தாங்கிக்கொள்ள முடியாது!

நாம் தேவனுக்கு அருகில் வாழ விரும்பினாலும், அவருடைய பிரசன்னத்தை முழுமை யாக நம்முடைய வாழ்வில் பெற்றுக்கொள்ள விரும்பினாலும், துதி ஆராதனையின் உயர்ந்த நிலைகளுக்குள் நாம் கடந்த செல்வது தவிர்க்க முடியத ஒன்றாகிவிடுகிறது. துதி ஆராத னைக்குள் நாம் ஆழமாய்க் கடந்து செல்லும்போது, தேவன் தம்முடைய மகிமையை பெரிய அளவில் நமக்கு வெளிப்படுத்துவார். நம்முடைய வாழ்க்கையும், நாம் இருப்பதும் தேவனுக்குள் தொடர்ந்து பாயும் நதிபோலாகும் வரைக்கும், நாம் துதி ஆராதனையில் வளர வேண்டும்.

*ஸ்தோத்திரம் செலுத்துதல், துதி மற்றும் ஆராதனை*

ஸ்தோத்திரம் செலுத்துவது நாம் தேவனுக்கு செலுத்தக்கூடிய தாழ்ந்த அளவிளான தொழுகையாகும். அது ஆராதனை வாழ்க்கையின் வெறும் ஆரம்பமாகும். அவருடைய எல்லா செயல்களுக்காகவும், தேவனுக்குச் செலுத்தப்படுவது ஸ்தோத்திரம் ஆகும். தேவன் யாராக இருக்கிறார் என்பதற்காக செலுத்தப்படுவது துதியாகும். ஆராதனை என்பது அவருடைய பிரசன்னத்திற்கு நாம் செய்யும் பிரதியுத்தரமாகும்.

தேவனைப் பற்றிய நம்முடைய ஆரம்ப அறிவு, அவருடைய கிரியைகளைப் பற்றிய அறிவாய் இருக்கிறபடியால், நியாயப்படி நாம் ஸ்தோத்திரம் செலுத்தியே ஆரம்பிக்கிறோம். நம்முடைய ஜெபங்களுக்கு தேவன் பதில்கொடுக்கும் ஒவ்வொரு முறையும், நாம் தேவனுக்கு நன்றி அல்லது ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். அவர் நமக்கு செய்யப்போவதாக விசுவாசிக்கும் காரியங்களுக்கும் நாம் நன்றி செலுத்த முடியும். விசுவாச ஜெபத்தோடு சேர்ந்து ஸ்தோத்திரம் செலுத்துவது, நம்முடைய விசுவாசத்தை பராமரிக்க உதவுகிறது. அது விசுவாசம் என்னும் இயந்திரத்தை உராய்வின்றி இயக்கும் உயவு எண்ணெயைப் போன்றது. ஆபிரகாம் தேவனுக்கு மகிமையைச் செலுத்தி விசுவாசத்தில் வல்லவனானான் (ரோம. 4:21).

துதி என்பது தேவனுடைய குணாதிசயங்களை அங்கிகரிப்பது ஆகும். அது தேவனுடைய வல்லமையை அறிந்துகொள்வது மட்டுமல்ல, அவருடைய ஆள்தத்துவத்தையும் அறிந்து கொள்வதாகும். இஸ்ரவேலர்கள் தேவனை ஆராதித்து அவருடைய கிருபையை நினைவு கூர்ந்தபோது, சாலமோனின் தேவாலயத்தை தேவன் மகிமையின் மேகத்தினால் நிறைத்தார் (2 நாளா. 5:13, 14). தாவீது, இஸ்ரவேலர்களைக் கணக்குப் பார்க்கும் தவற்றைச் செய்த போது, தேவன் அவனுக்கு நியாயத்தீர்ப்பில் மூன்று தெரிந்தெடுப்புகளைக் கொடுத்தார் (1 நாளா. 21:11, 12). தேவனுடைய பெரிய இரக்கமாகிய அவருடைய குணாதிசயத்தை அறிந்த தாவீது, தேவனுடைய கரத்தில் விழுவதைத் தெரிந்துகொண்டான் (1 நாளா. 21:13). தேவனுடைய கிருபையினால் எருசலேம் தப்புவிக்கப்பட்டது (1 நாளா. 21:15).

தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாயிருந்தான். அவன் தேவனுடைய கிரியைகளை விளங்கிக் கொண்டது மாத்திரமல்ல, தேவனுடைய சுபாவத்தையும் விளங்கிக் கொண்டிருந் தான். தேவனுடைய சுபாவத்தை விளங்கியிருந்த இன்னொரு மனிதர் மோசேயாகும். தேவ னுடைய குணாதிசயத்தை அவன் அறிந்திருந்ததினால், மோசே தேவனுடைய கண்களில் கிருபை பெற்று, இஸ்ரவேலர்களுக்காக பரிந்துபேசினான். தேவனுடைய கோபம், அவருடைய

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

வார்த்தைக்கு எதிராக இருக்காது என்பதை அறிந்த மோசே, தேவன் இஸ்ரவேலர்கள் மீது கோபமாய் இருந்தபோது, ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையை நினைத்து வேண்டிக்கொண்டான் (யாத். 32:13).

தேவனுடைய குணாதிசயத்தையும் சுபாவத்தையும் விளங்கிக் கொண்டவர்களால் மாத்திரமே, அவரோடு நெருக்கமாக தொடர்புகொள்ள முடியும். அவருடைய கிரியைகளை மாத்திரம் அறிந்தவர்கள், மிகப்பெரிய பரிந்துபேசுகிறவர்களாக இருக்க முடியாது. தேவன் யாராக இருக்கிறார் என்பதற்காக அவரை ஆராதிக்க நாம் கற்றுக்கொள்வது அவசியமாய் இருக்கிறது மற்றும் அவருடைய குணாதிசயங்களையும், பண்புகளையும் அதிகமதிகமாய் விளங்கிக்கொள்ள வேண்டும்.

தேவனுடைய பிரசன்னத்திற்கும் அவருடைய ஆள்தத்தவத்திற்கும் நாம் செய்யும் பிரதியுத்தரமே ஆராதனையாகும். அது, தேவன் தம்மை வெளிப்டுத்தினபின்பு நாம் செய்வதாகும். ஸ்தோத்திரம் செய்தலும், துதியும் தேவனுதடைய வெளிப்படுத்தலைக் கொண்டுவரும். ஸ்தோத்திரமும், துதியும் நாம் கர்த்தருக்கு கொண்டு வரும் காணிக்கை களாகும். ஆராதனை என்பது நாம் தேவனோடு வைத்துக்கொள்ளும் அன்பின் அந்நியோன்ய ஐக்கிமாகும். அது தேவனோடு ஒன்றாக இணைவதின் நிறைவாகும். நம்முடைய எல்லா ஸ்தோத்திரம் மற்றும் துதியின் உச்சகட்டமே ஆராதனை ஆகும்.

தனிப்பட்ட முறையில், ஆராதிப்பதற்கான அழைப்பை ஐந்து வகை ஊழியங்களைச் செய்யும் அழைப்பிற்கு மேலாக என்னுடைய முதல் அழைப்பாக நான் கருதுகிறேன். முதலில் நான் தேவனை ஆராதிக்க அழைக்கப்பட்டிருக்கிறேன்; பின்பு மாத்திரமே அவருக்கு ஊழியம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறேன். தன்னுடைய முதல் அழைப்பு கர்த்தரை ஆராதிப்பது என்பதை எலியா தீர்க்கதரிசி உணர்ந்திருந்தார். கர்த்தருக்கு முன்பாக நிற்கிறேன் என்று, அவருடைய அறிக்கைகளில் தொடர்ந்து குறிப்பிடுகிறார் (1 இரா. 17:1; 18:5). பிரதான தூதனாகிய காபிரியேலும் முதலில் தேவனை ஆராதிக்கிறவன், பின்பு தான் தேவனுடைய செய்தியைக் கொண்டுவருகிறவன். அவன் சகரியாவினிடத்தில் தேவ சந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல்தான் நான் என்று சொன்னான் (லூக். 1:19).

### *ஆவியில் ஆராதிப்பது*

பழைய ஏற்பாட்டு மக்களை விட, புதிய ஏற்பாட்டு மக்களுக்கு தேவனை ஆராதிப்பதில் மேம்பட்ட நிலையைத் தந்திருக்கிறார். புதிய பாஷை என்னும் வழியின் மூலம், சபையின் கைகளில், உடனடியாக ஆராதனையின் வல்லமையை தேவன் வைத்துள்ளார். ஆவியில் பாடுவதன் மூலம், நாம் உடனடியாக பரலோகத்தின் ஆழத்தில் நுழைந்து, முழுவதும் பரிசுத்த ஆவியானவரால் பிறந்த ஒரு தரமான ஆராதனையை செலுத்த முடியும். இந்த ஆராதனை மனதின் மட்டுபாடுகளுக்கு அப்பாற்பட்டு செல்லும்.

ஆவியில் ஆராதிக்கிற விஷயத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன. முதலாவது, நம்முடைய புதிய பாஷையில் பரிச்சயம். அந்நிய பாஷையில் எளிதாக பாடுவதற்கு முன், அந்நிய பாஷையில் நாம் எளிதாக பேசவேண்டும். நாள் செல்ல செல்ல, நமக்குத் தெரிந்த பாடல்களின் இராகத்தில், அந்நிய பாஷையில் பாட நாம் கற்றுக்கொள்ளலாம். இரண்டாவது அம்சம், புதிய இராகத்தையும் பெற்றுக்கொண்டு அந்நிய பாஷையிலும் பாடுவதாகும். புதிய பாஷைகளைக் கொடுக்கும் அதே பரிசுத்த ஆவியானவர் புதிய இராகங்களையும் கொடுப்பார் (எபே. 5:18, 19).

நம்முடைய பிதாவாகிய தேவன் ஆராதிப்பவர்களைத் தேடுகிறார். பரலோகத்திலுள்ள பிதாவானவர் தம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்பவர்களைத் தேடுகிறார் என்று இயேசு சொன்னார் (யோவா. 4:23, 24). நம்முடைய குரல் நாண்கள், தேவனை ஆராதிக்கும் கருவிகளாகவே முதலில் வடிவமைக்கப்பட்டன. தொடர்பு கொள்வதற்கு பேசப்படும் வார்த்தைகள் பரலோகத்தில் நமக்கு தேவையில்லை. நாம் அறியப்படிருக்கிறபடியே அறிந்துகொள்வோம் (1 கொரி. 13:12). நம்முடைய சிந்தனைகள் பார்க்கக்கூடியதாகவும், எல்லாருக்கும் தெரிந்ததாகவும் இருக்கும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

இந்தக் காரணத்தினாலே, வேதத்திலுள்ள எல்லா மக்களையும் அறிமுகமின்றி நாம் பரலோகத்தில் அடையாளங்கண்டுக்கொள்ள இயலும். நாம் அவர்களைப் பார்த்த உடனே, அவர்களை அறிந்துகொள்ளலாம். அது வார்த்தைக்கும் அப்பாற்பட்ட ஆவிக்குரிய அறிதலாகும். நாம் உண்மையாகவே, இன்னும் பேசவும், தொடர்புகொள்ளவும் முடியும். எனினும், மனித சத்தத்தின் உயரிய வடிவமைப்பு வெறும் தொடர்புகொள்ளுவதற்காக மட்டும் அல்ல. மனிதனுடைய வீழ்ச்சிக்குப் பின்னர், அது இந்த தாழ்வான நிலைக்குக் கொண்டுவரப்பட்டது அது இன்றுவரையிலும் உண்மையாக இருக்கிறது. நம்முடைய சத்தங்கள், ஆராதனையின் உறுப்புக்களாகவே முதலில் வடிவமைக்கப்பட்டன.

*ஜெபங்களும் ஸ்தோத்திரமும்*

ஜெபத்தைக் குறித்துப் பேசும் ஒவ்வொரு முறையும், பவுல் ஸ்தோத்திரம் செய்தலை தன்னுடைய நிருபங்களில் வலியுறுத்துகிறார். ஸ்தோத்திரத்தோடும், துதியோடும் எல்லா வகை ஜெபங்களையும் ஜெபிக்கத் தெரிந்த ஒரு மனிதர் அவர். எல்லா ஜெபங்களையும், விண்ணப்பங்களையும் ஸ்தோத்திரத்தோடே செலுத்த அவர் அறிவுறுத்தினார் (பிலி. 4:6). இடைவிடாமல் ஸ்தோத்திரத்துடன் கூடிய ஜெபத்தில் இருக்கும்படி பவுல் கொலோசெயர் களுக்கு கூறினார் (கொலோ. 4:2). இடைவிடாமல் ஜெபம்பண்ண அறிவுறை கூறுவது, ஒவ்வொன்றிலும் ஸ்தோத்திரஞ் செய்யும் அறிவுறையுடன் சேர்ந்தே வருகிறது (1 தெச. 5:17, 18).

ஸ்தோத்திரம் செலுத்தி துதி செய்யும் ஜெபம், நம்முடைய முழு வாழ்விலும் இடைவிடாத ஓட்டமாக இருக்க வேண்டும். தேவனுடைய பிரசன்னம் நம்முடைய வாழ்வில் நிரந்தரமாக இருப்பதில் இது முடிவடையும். இது நம்முடைய வாழ்வை தேவனை ஆராதிக்கும் கருவியாக மாற்றும். எல்லாவற்றிற்கும் மேலாக தேவனை ஆராதிப்பவர்களாக இருங்கள். தேவனை ஆராதிப்பவராக உங்கள் பங்கை நிறைவேற்றுமளவிற்கு நீங்கள் வளருவீர்களாக. கிறிஸ்துவின் முழு சரீரமும் தேவனோடு இசைவாக பரிசுத்த ஆவியானவர் கொண்டு வரும் ஒரு பெரிய சங்கீத இசைவாகும். இந்தக் காரணத்திற்காக, தேவனுக்கு ஆவிக்குரிய பலிகளைச் செலுத்தம் பரிசுத்த ஆசாரியத்துவத்திற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (1 பேது. 2:5).

தேவனை நாம் ஏன் ஆராதிக்க வேண்டும் என்பதற்கான எட்டு காரணங்கள்:

1. வாழ்க்கையின் காரியங்களைவிட தேவன் முக்கியமானவர் என்பதை காட்டுகிறது.
2. ஆராதனை, பிரச்சனைகளை சிறியவைகளாக மாற்றுகிறது.
3. ஆராதனை, தேவனுடைய வார்த்தையை நாம் பெற்றுக்கொள்வதை அதிகரிக்கிறது.
4. ஆராதனை, தேவனுடைய சத்தத்தைக் கேட்கும்படி நம்முடைய காதுகளை திருப்புகிறது.
5. ஆராதனை நம்முடைய ஆவிக்குரிய வாழ்வை வளர்ச்சியடையச் செய்கிறது.
6. ஆராதனை, சாத்தானுடைய நோக்கத்தை முறியடிக்கிறது.
7. ஆராதனை, தூதர்களை நம்முடைய உதவிக்க தூண்டகிறது.
8. ஆராதனை, தேவனை நீங்கள் நேசிக்கிறீர்கள் என்பதைக் காட்டுகிறது.

இருபத்த நான்கு மணி நேர சங்கிலி தொடர் ஜெபத்தை ஒழுங்கு செய்யும் மக்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். இருபத்து நான்கு மணி நேர துதி ஆராதனை சங்கிலி தொடரை நாம் ஒழுங்கு செய்வது அவசியமாயிருக்கிறது. அதிக நாளுக்குப் பிறகு வெளிப் படும் தேவமகிமையையும், தேவ பிரசன்னத்தையும் கற்பனை செய்துபாருங்கள். அது பல வருடங்களுக்கு செய்யப்படுமானால், பூமியிலே பரலோகம் இருப்பதைப் போலிருக்கும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## அத்தியாயம் 4

# ஜெப வழிமுறைகள்

ஜெப நேரங்களை பல்வேறு வகைகளில் ஒழுங்குப்படுத்தலாம். ஒவ்வொரு வழிமுறைக்கும் அதற்கேற்ற சிறப்புகள் உண்டு. நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைய, எல்லா வகை ஜெப வழிமுறைகளையும் பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. வித்தியாசமான அமைப்புகளில் ஜெபிக்க, வித்தியாசமான திறமைகள் தேவைப்படுகிறது.

*ஒன்றிணைக்கப்பட்ட கூட்டு ஜெபம்*

சபைகளுக்குள் தேவன் ஒன்றுசேர்த்து வைத்திருக்கும் வல்லமைகளின் முழு ஆதாரங் களையும் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டு ஜெபம் கொண்டுவரும். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் உள்ள சபை, ஒன்றுகூடி ஜெபிப்பதில் பலம்பொருந்தியதாக இருந்தது. பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் வருவதற்கு முன்பாக, பத்து நாட்கள் ஒருமணப்பட்டவர்களாக கூடி ஜெபித்தார்கள் (அப். 1:14; 2:1). ஒருமனப்பட்டு ஜெபிப்பது சபையின் தினசரி வாழ்வில் ஒரு பகுதியாக இருந்தது (அப். 2:42, 46; 3:1). உபத்திரவம் உண்டானபோது, அவர்கள் ஒன்றுபட்டு ஒருமனதோடு கர்த்தரிடத்தில் திரும்பினார்கள் (அப். 4:24). எருசலேம் திருச்சபை ஜெபிக்கும் திருச்சபையாயிருந்தது.

ஒன்றுகூடி வருகிறவர்கள் மத்தியில் ஒற்றுமை இருப்பது முக்கியமானது. அவர்களது ஒற்றுமையினிமித்தமாக, எருசலேம் திருச்சபை ஒன்றிணைக்கப்பட்ட கூட்டு ஜெபத்தின் முழு வல்லமையையும் பெற்றுக்கொள்ள முடிந்தது. அவர்களது தலைமைத்துவம் ஒற்றுமையாய் இருந்தது, திருச்சபையின் தலைமைத்துவத்திற்கு ஜனங்கள் விருப்பத்தோடு ஒப்புக்கொடுத் தார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் ஐக்கியத்திலும் தொடர்ந்து உறுதியாய் தரித்திருந்தார்கள். சபையில் தேவன் தலைவர்களை ஏற்படுத்தியிருக்கிறார். அவர்களுக்கு நாம் கீழ்படியக் கற்றுக்கொள்ள வேண்டும் (1 பேது. 5:5; எபி. 13:17).

அதேவேளையில், தலைவர்கள் ஆடுகளை அகந்தையுள்ள எஜமானர்களைப்போல நடத்தாமல், முன்மாதிரியாய் வாழ்ந்து வழிநடத்த வேண்டும் (1 பேது. 5:2, 3). கீழ்ப்படிதல் அல்லது இணங்குதல் கொடுக்கப்பட வேண்டும் அது எடுத்துக்கொள்ளப்படக் கூடாது. வேறு விததாகச் சொன்னால், நாம் மக்களின் மீது அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, அவர்கள் இணங்கும்படி கேட்கக் கூடாது. நாம் செய்யும்படியாய் தேவன் நம்மை அழைத்த காரியத்தில் உண்மையுள்ளவர்களாக, ஜாக்கிரதையோடு இருக்கவேண்டும். நம்முடைய வாழ்க்கையின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், மனப்பூர்வமாய் நம்முடைய தலைமைத்து வத்திற்கு கீழ்ப்படிவார்கள். நம்முடைய வரம் அதற்கு வழிதிறக்கும் (நீதி. 18:16).

பவுல் அப்போஸ்தலனின் தலைமைத்துவம் முன்மாதிரியாய் அமைந்த ஒன்று. தான் உதவி செய்த சபைகளுக்கு முன்மாதிரியைக் காண்பித்ததாக பவுல் கூறுகிறார் (அப். 20:35; 2 தெச. 3:9). முன்மாதிரியில் நடத்தம்படி பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்துகிறார் (1 தீமோ. 4:12). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தலைமைத்துவமும், முன்மாதிரியின்மேல் அமைக்கப்பட்ட ஒன்றுதான் (யோவா. 13:15). கீழ்ப்படிதல் இல்லாமல், எந்த சபையிலும் ஒற்றுமை இருக்க முடியாது. அங்கீகரிக்கப்பட்ட தலைமைத்துவத்தின் கீழ் சபை ஒன்றுபட்டு இருக்கும்போது மாத்திரமே, ஒன்றிணைக்கப்பட்ட கூட்டு ஜெபம் சாத்தியமாகும்.

ஒன்றிணைக்கப்பட்ட கூட்டு ஜெபத்தின் இன்னொரு பகுதி பொதுவான நோக்கமாகும். கூடிவருபவர்கள் ஒரே மனதுடனும், ஒரே இருதயத்தோடும் இருக்க வேண்டும் (அப். 4:32). காத்திருங்கள் என்ற இயேசு கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்படிந்து, பரிசுத்த ஆவியானவருக்காக சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர், மேல் வீட்டறையில் ஜெபித்துக்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

கொண்டிருந்தார்கள் (அப். 1:4, 13, 14). உபத்திரவத்தின் கீழ், சபை ஒன்றிணைந்து புதிய அளவு தைரியத்திற்காகவும், வல்லமைக்காகவும் ஜெபித்தார்கள் (அப். 4:24, 29, 30). தலைவர்களும் ஒன்றுகூடி ஒரு ஒன்றிணைந்த கூட்டு ஜெபக்கூட்டத்தை தலைவர்களுக்கு மத்தியில் வைக்க முடியும் (அப். 13:1, 2).

*இடைவிடாத ஜெபம்*

இடைவிடாத ஜெபம், ஒழுங்குபடுத்தப்பட்ட சங்கிலி ஜெபமாகும். பேதுரு சிறையிலடைக்கப்பட்ட போது எருசலேம் சபையார், ஜான் மாற்குவின் வீட்டில் இடைவிடாது ஜெபித்துக் கொண்டிருந்தார்கள் (அப், 12:5,12), இடைவிடாத ஜெபத்திற்கு பரிந்து பேசுபவர்களின் பகுதியில் மிகப் பெரிய ஒழுங்கு தேவைப்படுகிறது. ஜெவீரர்கள் குறிப்பிட்ட நேர அடிப்படையில் முறைப்படுத்தப்படலாம். ஒரே நோக்கத்திற்காக தொடர்ந்து ஜெபிப்பதில் ஒரு காரியம் ‘ஜெபித்து முடிக்கப்படுகிறது’. மேற்கொள்ளும் ஜெபத்தை அப்பியாசிப்பதே இப்படிபட்ட ஜெபத்தின் நோக்கம் ஆகும்.

மேற்கொள்ளும் ஜெபம் என்பது நம்முடைய பிதாவை மேற்கொள்வதல்ல என்பதை நினைவில் கொள்வது முக்கிய மானதாகும். நாம் ஜெபிக்கும் அத்தருணத்திலேயே, தேவன் நமக்கு செவிகொடுக்கிறார் (தானி, 10:12), எனினும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள்,நமக்கு பதில் கிடைக்காதபடி தடுக்க வகை தேடுகின்றன. நாம் அவைகளோடு ஜெபத்தில் போராட வேண்டும் (எபே. 6:12,18).

ஆவிக்குரிய உலகத்தைப் பற்றிய தரிசனத்தில், முழு உலகமும் அந்தகார மேகத்தினால் மூடப்பட்டிருக்கிறதை நான் கண்டேன். அவ்வப்போது இராட்சத ஒளிக்கற்றைகள் அந்த அந்தகாரத்தை ஊடுருவி வந்தன. கிறிஸ்தவ குழுக்கள் கூடி ஜெபிப்பதே அந்த ஒளிக்கற்றைகளின் ஆதாரம். இடைவிடாத ஜெபம், அந்தகார வல்லமைகளுக்கு எதிரான மேற்கொள்ளும் ஜெபமாகும்.

*உபவாசமும் ஜெபமும்*

உபவாசம் நம்முடைய ஜெபங்களின் தீவிரத்தைப் பெருக்குகிறது. நம்முடைய அனுதின ஆகாரத்தைவிட, நம்முடைய ஜெபங்களுக்கான பதிலை நாம் வாஞ்சிக்கிறோம் என்பதை, உபவாச ஜெபத்தின் மூலம் செயல்முறையில் காண்பிக்கிறோம். இயற்கைக்கு அப்பாற்பட்டு சாத்தியமாகும் காரியங்களை பெற்றுக்கொள்ளும் திறவுகோல் உபவாச ஜெபமாகும்.

அவர்களுக்கு விசுவாசமிருந்தால் சீஷர்களால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று இயேசு குறிப்பிட்ட போது, அவர் தொடர்ந்து உபவாசத்தைக் குறித்தும் பேசினார் (மத். 17:20,21) சாத்தானின் சில வல்லமைகள் மேல் அதிகாரம் எடுக்க உபவாசமும், ஜெபமும் தேவைப்படுகிறது என்று குறிப்பிடுகிறார் (மத்.17:21). வனாந்திரத்தில் சாத்தானை இயேசு சந்திக்கையில், நாற்பது நாட்கள் இரவும், பகலும் உபவாசித்தார் (லூக் 4:2). உபவாசத்திற்கும் ஆவிக்குரிய யுத்தங்களுக்கும் இடையே, நேரடி தொடர்பு உள்ளது.

முழு பெர்சிய இராஜ்ஜியத்தின் மேலுள்ள சாத்தானின் வல்லமையை தானியேலின் இருபத்தோரு நாள் உபவாசம் அசைத்தது (தானி.10:2,3,13,14). பெர்சிய தேசத்தின் மேலுள்ள பொல்லாத ஆவிகளுக்கு எதிராக, இரண்டு பிரதான தூதர்களான காபிரியேல் மற்றும் மிகாவேல் என்பவர்களின் உதவியை, ஒரு மனிதனின் ஜெபத்தால் கொண்டுவர முடிந்தது. ஜெபத்திற்காக உபவாசிப்பது, நெருப்பில் எரிபொருளை ஊற்றுவதைப் போன்றது, ஜெபத்தினுடைய தழல்களின் அளவை அது அதிகப்படுத்துகிறது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

உபவாச நாட்களில்தான், தேவனுடைய சத்தத்தைத் தெளிவாகக் கேட்க முடியும். அந்தியோகியா சபையின் தலைவர்கள் உபவாசித்து ஜெபித்த போது, பரிசுத்த ஆவியானவர் அவர்களோடு பேசினார் (அப். 13:1, 2). யோசபாத்தின் நாட்களில் இஸ்ரவேலர்கள் உபவாசித்து ஜெபித்தபோது, தேவன் யகாசியேல் மூலம் பேசினார் (2 நாளா. 20:14). அப்போஸ்தலர்கள், சபையின் மூப்பர்களை தேர்வு செய்யுமுன்பு, சரியான தலைவர்களைத் தெரிந்தெடுப்பதில் தேவனுடைய சத்தத்தைக் கேட்கும்படி, உபவாசித்து ஜெபித்தார்கள் (அப். 14:23).

உலகத்தில் பல பாகங்களிலும் வித்தியாசமான தேசங்களிலும், பூகோளப் பகுதிகளின் மேல் ஆளுகை செய்யும் பிசாசின் வல்லமைகளை, உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் இருப்பிடத்தை விட்டுத் துரத்தவேண்டும். இப்படிபட்டபகுதிகளுக்கு தேவனுடைய வார்த்தையைக் கொண்டுவரப் போராடும் ஊழியர்கள், வழக்கமான ஒழுங்கான உபவாச ஜெப வேளைகளைக் கொண்டிருக்க வேண்டும். இயேசு தனது ஊழியத்தில் செய்த முதலாவது காரியம், உபவாசத்தினால் சாத்தானோடு போராடினார். பரிசுத்த ஆவியானவரால் நிறைந்தவராய் நாற்பது நாட்கள் சோதனைக்குள் நுழைந்தார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் அதிலிருந்து வெளியே வந்தார்(லூக் 4:14). ஆவிக்குரிய மண்டலத்தில் நாம் வெற்றிபெறும் வரை, இயற்கை உலகத்தில் நடக்கும் யுத்தத்தில் வெற்றி பெற முடியாது.

### *முழு இரவு ஜெபம்*

இராமுழுவதும் ஜெபிப்பதில் இயேசு பழக்கப்பட்டிருந்தார். தன்னுடைய பன்னிரெண்டு சீஷர்களையும் தெரிதெடுப்பதில், பிதாவின் வழிகாட்டுதலுக்காக முழு இரவையும் அவர் ஜெபத்தில் செலவழித்தார் (லூக். 6:12). ஐந்தப்பம் இருமீன்கள் அற்புதத்திற்குப் பிறகு, இயேசு சீஷர்களையும் சேர்த்து எல்லா மக்களையும் அனுப்பிவிட்டு, முழு இரவையும் ஜெபத்தில் செலவழித்தார் (மாற். 6:46, 47). அதிகாலை நேரம் வரைக்கும் ஜெபித்துக் கொண்டிருந்தார். நாலாம் ஜாமத்தில் (அதிகாலை மூன்றிலிருந்து ஆறுமணிக்குள்) தம்முடைய சீஷர்கள் காற்றுக்கு எதிராக தண்டுவலிப்பதைக் கண்டு, தண்ணீரின்மேல் நடந்து அவர்களிடத்திற்கு வந்தார் (மாற். 6:48).

தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியில் கர்த்தருடைய பந்திக்குப்பிறகு, இயேசு ஜெபிக்கும்படி ஒலிவமலைக்குப் போனார் (லூக். 22:39,40). அவர் அதிக மணி நேரங்கள் ஜெபித்திருக்க வேண்டும். ஏனென்றால் இயேசுவைக் கைது செய்ய யூதாஸ் திரள்கூட்டதோடு வந்தபோது, ஏற்கெனவே விடியும் தருவாயிலிருந்தது. விசாரனை ஆரம்பித்து சிறிது நேரத்தில் சேவல் கூவிற்று, பொழுது விடிந்தது(யோவா.18:27,28). கர்த்தராகிய இயேசு தாம் சிலுவையிலறையப்படுவதற்கு முன்பு அந்தக் கடைசி இரவை, முழு இரவு ஜெபத்தில் கழித்தார்.

முழுஇரவுக் கூட்டத்தில் நாம் மேற்கொள்ளவேண்டிய இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஆவிக்குரிய மண்டலத்தில் நாம் போராட வேண்டும் மற்றும் நம்முடைய இயற்கையான சரீரத்தின் மட்டுப்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். இது தேவனுடைய சித்தமா அல்லது ஜெபிக்க வேண்டாமா என்பதை நம்முடைய உணர்வுகளினால் நாம் தீர்மானிக்க முடியாது. நம்முடைய சொந்த களைப்பினாலும், தூக்கத்தினாலும் அந்தக் கூட்டத்தின் ஆவிக்குரிய தரத்தை நம்மால் மதிப்பிடவும் முடியாது. இயேசுவின் சீஷர்கள் களைப்பாகவும், தூக்கமயக்கத்துடனும் இருந்தபோது, சில மிகவும் வல்லமையான சில இயற்கைக்கப்பாற் பட்ட நிகழ்வுகள் நடந்திருக்கின்றன (லூக். 9:32; 22:43–46).

முழு இரவு ஜெபத்தில் தூக்கம் வரக்கூடிய சாய்வில் சரீரத்தை வைத்துக்கொள்வதை தவிர்க்க வேண்டும். இயேசுவின் சீஷர்கள் ஜெபிக்க வேண்டும் என்பது தேவனுடைய

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

சித்தமாய் இருந்தது. ஆனால் அவர்கள் நித்திரைமயக்கமாய் இருந்ததினால், இயேசுவுடன் ஒருமணி நேரம் கூட ஜெபிக்க முடியவில்லை (மத். 26:40, 41). சோதனைக்குட்படாதபடி அவர்கள் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கேட்டுக்கொண்டார் (லூக். 22:40). ஜெபமற்றவர்களை நெருக்குகிற அதிகமான தேவையற்ற பிரச்சனைகளையும் சோதனை களையும், ஜெபிக்கிற மனிதன் தவிர்த்துக் கொள்கிறான்.

முழு இரவு விழிப்புகள் தனியாகவோ, கூட்டாகவோ செய்யப்பட முடியும். தனியாக நீண்ட நேரம் ஜெபிக்க முடியாதவர்கள், அந்த பழக்கத்தை வளர்த்துக்கொள்ளும்வரை, நல்ல ஜெபக் கூட்டங்களில் சேர்த்து கொள்ள வேண்டும். இயேசு ஜெபித்ததை போல் நாம் ஜெபிக்காவிட்டால், இயேசுவைப்போல் வாழவும் முடியாது, அவரைப்போல கிரியை செய்யவும் முடியாது. ஜெபவாழ்க்கையே கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், சபையின் வாழ்க்கைக்கும் அஸ்திபாரமாகும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

*அத்தியாயம் 5*

# தேவனுக்கு காத்திருத்தல்

தேவனுக்கு காத்திருத்தல், ஆவிக்குரிய வளர்ச்சியின் தனிப்பட்ட அமைப்பாயிந்தாலும் ஜெபத்துடனே தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கர்த்தருக்குப் காத்திருக்கும் கலையைக் கற்றுக் கொள்வது கட்டாயத் தேவையாயிருக்கிறது. எப்படி தேவனுக்கு காத்திருப்பது என்று கற்றுக்கொள்ளாமல், தேவனுடைய பூரண சித்தத்தில் வாழ ஒரு கிறிஸ்தவனாலும் இயலாது. அநேக கிறிஸ்தவர்கள் பூரண தேவ சித்தத்தை செய்யாமல், அனுமதிக்கப்பட்ட தேவ சித்தத்தையே செய்து கொண்டிருக்கின்றனர். கர்த்தருக்குக் காத்திருக்கும் கலையைக் கற்றுக்கொள்வதே, பூரண தேவ சித்தத்தை கண்டுபிடிக்கும் திறவுகோல் ஆகும்.

*ஆவிக்குரிய வாழ்வின் சுழற்சிகள்*

இயற்கை வாழ்வு இயற்கையின் சுழற்சிகளால் நிறைந்துள்ளது. தூக்கம் மற்றும் விழிப்பின் சுழற்சி, குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், வளர்ச்சியடைந்த பருவம் முதலியன. ஆவிக் குரிய உலகிற்கு அநேக சுழற்சிகள் இருக்கின்றன. சாத்தானும் சுழற்சிகளில் தாக்குகிறான். தீங்கு நாளில் அவைகளை எதிர்க்க பெலனாயிருப்பதைப் பற்றி பவுல் கூறினார் (எபே. 6:13). இடைவிடாமல் சாத்தான் தாக்க முடியாது. அவன் தன்னுடைய தாக்குதல்களை சுழற்சி முறையிலே திட்டமிடுகிறான். இயேசுவை சோதிப்பது தோல்வி அடைந்தவுடன், திரும்ப தாக்கும் சரியான தருணத்தை தேடிக்கொண்டு அவரை விட்டு விலகினான் (லூக். 4:13).

கர்த்தருக்கு காத்திருப்பவர்கள் தங்கள் பெலனைப் புதுபித்துக் கொள்வார்கள். அவர்கள் கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து உயர எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். அவர்கள் நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் (ஏசா. 40:31). இங்கு நான்கு சுழற்சிகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன: காத்திருத்தல், பறத்தல், ஓடுதல் மற்றும் நடத்தல். இந்த சுழற்சிகள், அடிக்கடி நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் திரும்ப உருவாகின்றன. வேகத்தில் உள்ள வித்தியாசத்தை கவனியுங்கள். காத்திருப்பதில் இருந்து, கழுகைப்போல செட்டைகளை அடித்து, அது வேகம் குறைந்த ஓடுதலாக மாறுகிறது. அதற்கடுத்து இன்னும் வேகம் குறைந்து நடத்தலாக மாறுகிறது மற்றும் அடுத்து காத்திருத் தலாக மறுபடியும் திரும்ப ஆரம்பிக்கிறது.

சுழற்சியில் ஒவ்வொரு பகுதியும் முக்கியமானது. கழுகானது கீழ்நோக்கிப் பாய்ந்து தன் இரையைப் பிடிக்க வேகத்தை குறைக்க வேண்டியது அவசியமாகிறது. அடுத்து தன் ஆகாரத்தை சாப்பிட, ஒரு அமைதியான இடம் தேவைப்படுகிறது. மேலும் தன் வீட்டை அமைத்துக்கொள்ள வழக்கமான கூடும் தேவைப்படுகிறது. புதிய வழிகாட்டுதலையும் தரிசனத்தையும் பெற்றுக்கொள்ள, கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டிய நேரங்கள் இருக்கின்றன. அந்த நேரங்களிலிருந்து நம்முடைய வாழ்க்கைக்கான தேவ தரிசனத்தோடு வெளிவரு கிறோம். அதை நாம் நடைமுறைப்படுத்தும்போது, அந்த தரிசனத்தோடு எப்படி ஓட வேண்டும் மற்றும் நடக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வது நமக்கு அவசியமாகிறது.

*தேவனுக்கு காத்திருக்கும் கலை*

ஆங்கில வேதாகமத்தில் ஐந்து எபிரேய வார்த்தைகள் ‘காத்திரு’ ‘wait’ என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொருன்றிற்கும் வெவ்வேறு அர்த்தங்கள் இருக்கின்றது. அவைகள் பின்வருமாறு:

1. சாக்கா (Chakah) – ஆர்வமுடன் காத்திருத்தல் (ஏசா. 64:4; ஆப. 2:3).
2. டுமிய்யா (Dumiyyah) – அமைதியாக காத்திருத்தல் (சங். 62:1; 65:1).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

3. டாமன் (Daman) – அசையாமல் நின்று (சங். 62:5).
4. ட்சபா (Tsaba) – பணிவிடைசெய்ய (எண். 8:24, 25).
5. ஃகவா (Qavah) – நம்பிக்கையோடு காத்திருத்தல், கட்டப்பட்டிருக்க (சங். 25:3; 37:9; 69:6; புல. 3:25; ஏசா. 40:31; 49:23).

ஏசாயா நாற்பதாம் அதிகாரத்தில் வரும் 'காத்திரு' என்னும் வார்த்தை 'ஃகவா' ('Qavah') என்னும் வார்த்தையிலிருந்து வருகிறது. அதிதியாகக் காத்திருப்பதையோ அல்லது எதையோ பெற்றுக்கொள்ள ஆர்வமுடன் காத்திருப்பதையோ அது குறிக்கவில்லை. அவருடைய கட்டளையைக் கேட்க காத்திருப்பதையோ அல்லது சேவை செய்ய காத்திருப்பதையோ அது குறிக்கவில்லை. இவைகள் எல்லாம் நல்லதுதான் மற்றும் ஆவிக்குரிய வாழ்வில் அவைகளுக்கென்று இடமுண்டு. எனினும் உண்மையாக தேவனுக்கு காத்திருப்பது என்பது, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற காத்திருப்பதையோ அல்லது, அனுப்பும்படி காத்திருப் பதையோ குறிக்கவில்லை.

'ஃகவா' ('Qavah') என்னும் வார்த்தையின் மூல அர்த்தம் என்னவென்றால் 'ஒன்றாக கூடுதல்' அல்லது 'கட்டப்படிருத்தல்'. 'ஃகவா' என்னும் வார்த்தை 'ஒன்றாக கூடுதல்' என்று எரேமியா 3:17 மற்றும் ஆதியாகமம் 1:9ல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வசனங்களில் ஒன்றாக கூடுதல் என்பது வெறும் ஒன்றாக சேர்தல் என்னும் அர்த்தத்தில் வராமல், ஒற்றுமை யினால் ஒன்றாகக் கட்டப்பட்டிருத்தல் என்று வருகிறது. கர்த்தருக்கு காத்திருப்பது என்பது, அவரை ஏற்றுக்கொள்ளவோ அல்லது சேவை செய்யவோ காத்திருப்பது அல்ல. அது அவருடைய பிரசன்னத்தில் தரித்திருத்தல், பூரணமாக ஒன்றாக சேர்ந்திருக்க கட்டப்பட்டு இருப்பதை நாடுதலாகும். காத்திருக்கும் நேரங்கள், கர்த்தரோடு நெருக்கமான பந்தமுள்ள நேரங்களாக இருக்க வேண்டும்; அங்குதான் அவர் நம்மில் நிலைத்திருக்கிறார் மற்றும் நாமும் அவரில் நிலைத்திருக்கிறோம்.

காத்திருக்கும் கலை என்பது கர்த்தரோடு பூரண ஒன்று சேருதலில் நம்மை இணைத்துக் கொள்ளும் கலையாகும். கர்த்தரோடு நம்மை இணைத்துக்கொள்வது தண்ணீர்கள் ஒன்று சேர்வதைபோல இருக்க வேண்டும் (ஆதி. 1:9).

*தேவனால் புதுப்பிக்கப்படுதல்*

'புதுப்பித்தல்' என்னும் வார்த்தை 'சாக்கா' ('Chakah') என்னும் எபிரேய வார்த்தையில் இருந்து வருகிறது. அதற்கு நான்கு விசேஷ அர்த்தங்கள் இருக்கின்றன. நாம் கர்த்தருக்கு காத்திருக்கும்போது நடக்கும் புதுப்பித்தலுக்கான தொடர் நிகழ்வை ஒவ்வொரு அர்த்தமும் விளக்குகிறது. 'சாக்கா' ('Chakah') என்னும் வார்த்தையின் சாத்தியமான நான்கு மொழி பெயர்ப்புகள் பின்வருமாறு:

1. நீக்கப்பட்ட அல்லது உருவக்கடாவுதல் (ஏசா. 2:18; நியா. 5:26).
2. மாற்றப்பட்ட (ஆதி. 35:2; 41:14; 2 சாமு. 12:20; சங். 102:26).
3. முன்னேறி போ (1 சாமு. 10:3).
4. வளர்தல் (சங். 90:5, 6).

நாம் கர்த்தருக்கு காத்திருந்து அவரோடு ஒன்றாகக் கட்டப்படும்போது, நான்கு காரியங்கள் நடைபெறுகின்றன: நம்முடைய கூர்மையான ஓரங்கள் நீக்கப்படுகின்றன, நம்முடைய பெலனை தேவனுடைய பெலனோடு மாற்றிக்கொள்கிறோம், முன்னேறிப்போகும்படியாக புதிய தரிசனத்தைப் பெற்றுக்கொள்கிறோம், மற்றும் அவரோடு நெருங்கிய தொடர்பைப் பெற்றுக் கொள்ளும் நேரங்களில் ஆவிக்குரிய வளர்ச்சி அடைகிறோம். நமது வெறும் களைப்பு நீங்குவதுமட்டுமல்லாமல், அவருடைய வேலையைச் செய்ய, நாம் அவருடைய பலத்தைப் பெற்றுக்கொள்கிறோம். இயேசுவின் எல்லா கிரியைகளுக்கும் திறவுகோல், பிதாவோடு அவருக்கு இருந்த ஐக்கியமே (யோவா. 14:10, 11). தேவனுக்குக் காத்திருக்கும் கலையை

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

நாம் கண்டுபிடித்துவிட்டால் – அவரோடு ஐக்கியமாயிருந்தால் – இயேசுவிக்கிருந்த அதே ஆதாரங்களிலிருந்து நாமும் பெற்றுக்கொள்ளலாம். தேவனோடு ஐக்கியமாயிருப்பதின் மூலம், அவர் செய்த கிரியைகளை நாமும் செய்ய முடியும், அவர் வாக்குப்பண்ணினபடி அதைவிட பெரிய கிரியைகளையும் செய்யலாம் (யோவா. 14:12).

நம்முடைய சரீரங்களை ஜீவபலியாகப் படைக்க வேண்டுமென்று பவுல் நமக்கு அறிவுரை கூறினார் (ரோம. 12:1). இது தேவனோடு ஐக்கியமாகும்போது, நம்மடைய சரீரங்கள் அவருடைய எலும்பாகவும் மாமிசமாகவும் மாறுவதைக் குறிக்கிறது (எபே. 5:30). முடிவான பலன் என்னவென்றால் நம்முடைய மனம் புதிதாகிறதினாலே நாம் மறுரூபமாகிறோம் (ரோம. 12:2).

'புதுபித்தல்' என்னும் வார்த்தைக்கு கிரேக்க பதம் 'அனகய்னோஸ்' ('anakainos'), அதின் அர்த்தம் 'மறுபடியும் புதிதாக்குவது' என்பதாகும். இது வெறும் களைப்பை நீக்குவதல்ல; அது மாற்றப்படுகிறது – நம்முடைய பெலனுக்கு பதில் அவருடைய பெலன். புதுப்பிக்கப்படுதலின் முடிவான பலன் மறுரூபம் (கிரேக்க பதம் – metamorphoomai – மெட்டமார்பூமாய்). மறுரூபம் என்ற வார்த்தையின் அதே கிரேக்கப் பதம், ஒலிவ மலையில் இயேசுவின் மறுரூபத்தைக் குறிக்கிறது (மாற். 9:2).

அவர் மறுரூபமானபோது, இயேசுவின் முகம் சூரியனைப்போல பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று (மத். 17:2). தம்முடைய சரீரங்களை ஜீவ பலியாக படைத்து, தேவனோடு நெருக்கமாக நடப்பவர்கள், அவர்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக்கப்படுவார்கள் (அமைப்பின் மறுரூபம்). ஆலோசனை சங்கத்தில் அவன் விசாரிக்கப்படும்போது, ஸ்தேவானின் முகம் தேவதூதனுடைய முகம் போலிருந்தது (அப். 6:15).

தேவனோடு நம்மை இணைத்துக்கொண்டு அவருடைய மகிமையைக் காணும்போது, தேவனுடைய ஆவியானவராலே, மகிமையிலிருந்து மகிமைக்கு நாம் மறுரூபமாக்கப் படுகிறோம். தேவனுக்கு காத்திருங்கள். உங்களை அவரோடு இணைத்துக்கொள்ளுங்கள். அவருடைய மகிமை உங்கள் ஆவியையும், ஆத்துமாவையும், சரீரத்தையும் உங்கள் வஸ்திரங்களையும் கூட மறுரூபமாக்கி மறு அமைப்பில் கொண்டுவரும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 